செந்தமிழ்

தொகுதி 89 டிசம்பர் 92 பகுதி 4

காலாண்டு இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன். பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்
ந. பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,பி.எட்.

பொருளடக்கம்

1. பாட்டும் தொகையும் - ஒரு பார்வை
பேரறிஞர் அ.மா. பரிமணம் 1

2. ஆங்கிலத்தில் அகநானூறு
பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி 14

3. திருவாசகம் கூறும் 'கோகழி' யாது?
பேரறிஞர் பெ. சுப்பிரமணியன் 16

4. வ.ரா.என்றோர் அக்கினிக்குஞ்சு
திருமதி சி. சுந்தரி எம்.ஏ., 24

5. வேல்காட்டும் தொன்மம்
திருமதி சந்திரா சுப்பிரமணியன் 30

6. அறிவியல் தமிழ் - இருபதாம் நூற்றாண்டின் முதல்தமிழ் நூல்
பேரறிஞர் தொ. பரமசிவம் 35

7. மொழி பெயர்ப்பு உத்திகள்
செ. இராசேசுவரி 41

8. தமிழின் சிறப்பியல்பு
திரு. நாராயணையங்கார் 48

9. பிரபாகர மாலை
மஹாராஜராஜஸ்ரீ முத்துவிஜயரகுநாத முத்துராமலிங்க சேதிபதியவர்கள் 52

10. தமிழ்ச்சங்கச் செய்திகள் 56

பாட்டும் தொகையும் - ஒரு பார்வை

—பேரறிஞர் **அ.மா. பரிமணம்**

(முன். இதழ்த் தொடர்ச்சி)

திணைப் பாகுபாடு

அகத்திணைப் பாகுபாட்டினைக் கூறுங்கால் தொல்காப்பியம், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச், சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' (தொல். பொருள். அகம். 5) என்று குறிப்பிட்டுள்ளது. இவ் வரிசைக்கு நச்சினார்க்கினியர் தம் உரையில் முறைவைப்புக் காரணம் கூறியுள்ளார். தொகை நூல்களிலும் கீழ்க்கணக்கு நூல்களிலும் இம்முறை பிறழக் கோத்துள்ளமை அறிந்து இவ்வுரையாசிரியர், 'உம்மை எதிர் மறையாகலின் இம்முறையன்றிச் சொல்லவும் படும் என்பது பொருளாயிற்று. அது தொகைகளிலும் கீழ்க்கணக்குகளிலும் இம்முறை மயங்கிக் கோத்தவாறு காண்க என்று விளக்கமும் தந்துள்ளார். கலித்தொகை பாலைத்திணையை முதலாகக்கொண்டும், ஐங்குறுநூறு மருதத்திணையை முதலாகக் கொண்டும், ஒவ்வொரு தொகைக்குமுரிய பாடல்களை ஒருசேர அமைத்தும் தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால், எஞ்சியுள்ள அகத்தொகைகளாய நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகியன முறையே, குறிஞ்சி,குறிஞ்சி, பாலை ஆகிய திணைப்பாடல்களில் தொடங்கி, அடுத்துப் பிற திணைப் பாடல்கள் முறையின்றி விரவி வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால், அகநானூறு மட்டும், ஒற்றைப்படை எண் கொண்ட பாடல்கள் அனைத்தும் (1,3,5,7,9...) பாலைத் திணையாகவும், இரண்டு எட்டு என முடியும் எண் கொண்ட பாடல்கள் அனைத்தும் (2,8,12,18...) குறிஞ்சித் திணையாகவும், நான்கு என முடியும் எண் கொண்ட பாடல்கள் அனைத்தும் (4,14,24...) முல்லைத் திணையாகவும், ஆறு என முடியும் எண் கொண்ட பாடல்கள் அனைத்தும் (6,16,26...) மருதத்திணையாகவும், பத்து என முடியும் எண் கொண்ட பாடல்கள் அனைத்தும் (10,20,30...) நெய்தல் திணையாகவும் அமையுமாறு கோக்கப்பட்டுள்ளன.

அகத்தொகைப் பாடல்களுள் — நூலில் கிடைக்காதனவும் மிகைப்பாடல்களும் கடவுள் வாழ்த்துப் பாடல்களையும் நீக்கி எஞ்சியுள்ள 1846 (மர்ரே பதிப்புக்கள்படி) பாடல்களுள் — பாலைத் திணைப் பாடல்களே எண்ணிக்கையில் மிக்குள்ளன. பாலைத் திணைப் பாடல்கள் 527, குறிஞ்சித் திணைப் பாடல்கள் 487, நெய்தல் திணைப் பாடல்கள் 343, மருதத் திணைப் பாடல்கள் 256, முல்லைத் திணைப் பாடல்கள் 233 என அமைந்துள்ளன.

அகத்திணையைப் போன்றே புறத்திணையும் ஏழு வகைப்படும் என்பதனை உடன் படாது அவற்றைப் பதினொன்றாகக் கொள்ளும் மரபினை உடன்பட்டுப் புறநானூற்றின் திணைப் பாகுபாடு அமைக்கப்பட்டுள்ளது. பதிற்றுப் பத்துப் பாடல்கள் அனைத்தும் பாடாண்டிணையுள் அடங்குவனவாகும்.

தெய்வ வாழ்த்துக்கள்

பாட்டும் தொகையுமான நூல்களுள் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள், பரிபாடலிலுள்ள திருமால் செவ்வேள் பற்றிய பாடல்கள் தவிர எஞ்சிய பாடல்கள் புற அகத்திணை அடிப்படையில் பாடப் பட்டனவாதலின் அக்கால மக்களின் சமய நிலை பற்றி நேரே உணர்த்தும் பாடல்கள் தோன்றும் வாய்ப்பிலதாயிற்று. எனினும், புறநானூறு ஏனைய அகத்தொகைகள் ஆகியவற்றில், உவமை வாயிலாகவும் பிற வாயிலாகவும் இடம் பெற்றுள்ள குறிப்புக்கள் அக்கால மக்களின் தெய்வ உணர்வு நிலையைப் புலப்படுத்துவனவாக உள்ளன. அவற்றால் திருமால், முருகன், சிவன், போன்ற தெய்வங்கள், வீர வணக்க முறையில் அமைந்த வழிபாட்டு மரபுகள், சமயஞ் சார்ந்த சில பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஓரளவு உணர்ந்து கொள்ள முடிகின்றது. உருத்திரங் கண்ணனார், இளங்கண்ணனார், இளங்குமரனார், இளம் போதியார், ஓரிற் பிச்சையார், பிரமனார், இறையனார் போன்ற சங்கப் புலவர்களின் பெயர்கள் கொண்டும் அக்கால மக்களின் தெய்வ உணர்வு பற்றி உணர்ந்து கொள்ளலாம். புத்த சமயச் செல்வாக்கினை இளம்போதியார் என்னும் பெயர் கொண்டு உணரக்கூடும் என்பர் ஆய்வாளர்கள்.

சங்கத் தொகை நூல்களுள், கிடைத்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடியோரில் இருவர் பெயர்களே அறியப்படு

கின்றன. சிவபரமாக அமைந்த கலித்தொகை வாழ்த்தினைத் தொகுப்பாசிரியர் நல்லந்துவனாரும், ஏனைய நற்றிணை முதலிய நான்கு பாடல்களைப் பாரதம் பாடிய பெருந்தேவனாரும் பாடியுள்ளனர் என்னும் செய்தியினை அனைவரும் அறிவர். திருமால், முருகன், சிவன் ஆகியோர் மீது ஒருவரே பாடியிருத்தலின் அவ்வாசிரியரின் சமயப் பொறையுடைமையை உணரலாம். பெருந்தேவனார் முருகன் மீதியற்றிய வாழ்த்துப் பாடல் குறுந்தொகைக்கும், திருமால் பற்றிய பாடல் நற்றிணைக்கும், சிவன் பற்றிய பாடல்கள் அகநானூறு, ஐங்குறுநூறு, புறநானூறு ஆகியவற்றிற்கும் வாழ்த்தாக அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட தொகை நூலுக்கும்,அதன் கடவுள் வாழ்த்தில் கூறப்படும் தெய்வத்திற்கும் இடையே சமயத் தொடர்பு யாதொன்றுமில்லை.இதனைக் கொண்டு, அத்தொகைகளைத் தொகுத்தாரும், சமய வேறுபாடு இல்லாதவராய்த் தம் நூலுக்கு ஒரு கடவுள் வாழ்த்து வேண்டுமென்று கருதியதையும், அப்பாடல் எத்தெய்வம் பற்றிய தாயினும் சமயப் பொறையுடையாரால் பாடப்பட்டிருப்பது தக்கது என்று கருதியதையும் உய்த்துணர்தல் கூடும். இவற்றிற்கு மேலாக, காலந்தோறும் இத்தொகை நூல்களைப் பயில்வோரும் தெய்வ வேறுபாடு கருதி ஒதுக்கிவிடாமல், வேறுபாடற்ற தெய்வ உணர்வோடு இந்நூல்களைப் பயின்று பயன் கொள்ளுதல் வேண்டும் என்று தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் கருதினர் என எண்ணவும் இடமளிக்கின்றது.

நற்றிணை

பழைய உரையென எதுவும் அறியப்படாத நிலையில் நற்றிணைக்குப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் கடந்த இரத்தாட்சி ஆண்டில் (1924-1925)ஒரு சிறந்த உரையினை எழுதிப் பதிப்பித்துள்ளார்கள். பாடலாசிரியர் பெயரைத் தலைப்பாகக் கொண்டு அமைக்கப்பட்ட பாடல்களுக்குத் துறை விளக்கம், பொழிப்புரை, அருஞ்சொற்பொருள், கருத்து விளக்கம், உள்ளுறை, இறைச்சி விளக்கம், மெய்ப்பாடு, பயன் போன்ற குறிப்புக்கள் தந்துள்ளார்கள். நூலின் தொடக்கத்தில் நூலாலறியப்படும் 175 புலவர்களின் வரலாற்றுச் சுருக்கமும், பாடப்பட்டோர் பதினைவர் தம் வரலாற்றுச் சுருக்கமும் எழுதியுள்ளார்கள். இவரது உரையினைத் தமது வெளியீடாக 1952-இல் வெளியிட்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், உரையாசிரியர்

தம் முகவுரையில் அகநானூற்றுச் செய்யுளின் மேலெல்லை 31 என்பதற்கு மாறாக 37 அடி எனத் தவறு படக் குறிப்பிட்டுள்ளதனைத் திருத்தாமல் பதிப்பித்திருப்பது வருத்தமளிப்பதாகவுள்ளது. பேராசிரியர் ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களும் இந்நூலுக்கு உரை வரைந்துள்ளார்கள். வணிக நோக்கில் எழுந்த உரைகளும் உள.

குறுந்தொகை

தொல்காப்பிய உரையாளருள் ஒருவராய பேராசிரியர் குறுந்தொகையின் 380 பாடல்களுக்கு உரை எழுதினார் என்றும், அவர் எழுதாத 20 பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை வரைந்தார் என்றும், இன்று அவ்விருவர் உரைகளுமே அகப்படவில்லை என்றும் தமிழிலக்கிய வரலாறு கூறுகின்றது. குறுந்தொகையைச் சௌரிப் பெருமாள் அரங்கன் என்பார் முதற்கண் உரையொடு பதிப்பித்தார் என்றும்; அவருக்குக் கிடைத்த ஏடுகள் காரணமாக அப்பதிப்பில் பிழை பல இருந்தன வென்றும் பேரா. வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள், திரு. சேசாசல ஐயரவர்கள் நடத்திய கலா நிலைய இதழில், திரு. இராமரத்தினமையரவர்கள் குறுந்தொகைக்கு ஒரு புதிய உரையெழுதி வெளியிட்டுள்ளார். குறுந்தொகைக்குப் பிழையற்ற பதிப்பும் தெளிவான உரையும் வேண்டும் என்னும் தமிழ் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் டாக்டர் உ.வே.சாமிநாதையரவர்கள் உரையெழுதி 1937-இல் வெளியிட்டுள்ளார்கள். பாடல்களுக்குக் கூற்றுவகையால் தலைப்பிட்டுள்ளார். கூற்று விளக்கம், பாடல், கிளவி, அதன் விளக்கம், பாடலாசிரியர், பாடபேதங்கள், பதவுரை, முடிபு, கருத்து, விரிவுரை, மேற்கோள் விளக்கம் ஆகிய விவரங்களை ஒவ்வொரு பாடலுக்கும் தந்து தம் உரையினை நிறைவு செய்துள்ளார். முன்னுரையில் நூலாராய்ச்சி என்பதன்கண் கொடுக்கப்பட்ட பாடினோர் பாடப்பட்டோர் முதலிய பல்வேறு ஆய்வுச் செய்திகளும் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள, அரும்பத அகராதியும் ஆய்வாளர்க்குப் பெரும் பயன்விளைப்பன; டாக்டர் ஐயரவர்களின் ஆராய்ச்சித் திறனுக்கும் பதிப்புமுறை நுட்பத்திற்கும் சான்று பகர்வன. இவருரைக்குப் பின்னர்ப் பலர் இந்நூலுக்கு எழுதிய உரைகளெல்லாம் வணிக நோக்கங் கொண்டன என்று கூறலாம். அந்நிலைக்குத் தானும் புறம்பாகி விடக் கூடாது

என்னும் நோக்கத்தொடு வெளியிடப்பட்டதாகவே அண்மையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட அழகான குறுந்தொகைப் பதிப்பையும் கருத வேண்டியுள்ளது! இனியாவது அரைத்த மாவையே அரைக்கும் பணியில் தமிழறிஞர்கள் ஈடுபடாமலிருப் பாராக. மகாவித்துவான் ரா. ராகவையங்காரவர்கள் எழுதிய குறுந்தொகை விளக்கத்தின் எஞ்சிய பகுதியோடு முழுநூலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை அண்மையில் வெளியிடவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வுரை பல ஆண்டு கட்கு முன்னர் எழுதி வைக்கப்பட்டது என்பதனை நினைவிற் கொள்ள வேண்டும்.

ஐங்குறு நூறு

ஐங்குறு நூறு என்னும் தொகை நூல், 3முதல் 6முடியவுள்ள அடிகள் கொண்ட 500 பாடல் கொண்டது எனப் பொருள் படும். மருதத் திணையினை ஓரம் போகியாரும், நெய்தல் திணையினை அம்மூவனாரும், குறிஞ்சித் திணையினைக் கபிலரும், பாலைத் திணையினை ஓதலாந்தையாரும், முல்லைத் திணையினைப் பேயனாரும் இம்முறையில் தனித்தனியே 100 பாடல்களில் பாடி யுள்ளனர். ஒரு பொருள் மீது பத்துப் பாடல் கொண்ட அமைப்பு ஒரு பத்தாகவும், அவ்வாறு பத்துப் பத்துக்கள் கொண்டது ஒரு திணைக்குரிய பகுதியாகவும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்தும் அதில் இடம் பெறும் பெயரின் அடிப்படையில் கிள்ளைப் பத்து, குரக்குப் பத்து, மஞ்ஞைப்பத்து என்றிவ்வாறும், இடம் பெற்றுள்ள பொருளின் அடிப்படையில் கிழவற்குரைத்த பத்து, தலைவி இரங்கு பத்து, புலவி விராயபத்து என்றிவ்வாறும் பெய ரிடப்பட்டுள்ளது. இந்நூலின் 469-ஆம் பாடல் வரையிலான பகுதிக்குப் பழைய குறிப்புரை ஒன்று அமைந்துள்ளது. உள்ளுறை இறைச்சி போன்றவற்றை நுட்பமாக விளக்கும் அவ்வுரையின் ஆசிரியர் பெயர் அறியக் கூடவில்லை. இந்நூலினை டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் 1903-இல் இதன் பழைய உரை யோடு பதிப்பித்துள்ளார்கள். பின்னர், நூல் முழுவதற்கும் விளக்கமான உரையோடு ஔவை. துரைசாமிப் பிள்ளையவர்கள் உரை வரைந்துள்ளார்கள். இவற்றை ஒட்டி மூலமாகவும் மூலமும் உரையுமாகவும் சிலர் வெளியிட்டுள்ளனர். ஐங்குறு நூற்றின் 18-ஆம் பத்தாகிய தொண்டிப்பத்து அந்தாதியாக அமைந் துள்ளது. பிற்கால இலக்கியங்களில், குறிப்பாகச் சிற்றிலக்கிய

வகை சிலவற்றில் மிக்க செல்வாக்குப் பெற்று விளங்கும் அந்தாதி அமைப்பிற்குச் சங்க காலத்தில் அமைந்த இப்பத்து முன்னோடியாகத் திகழ்கின்றது. பிற்காலத்தில் பத்துப்பாடல்கள் கொண்டமையும் பதிகங்கள் தோன்றுவதற்கும் ஐங்குறு நூற்றின் பத்துக்கள் முன்னோடியாக இருந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது போன்று' பாடல் எண், திணை ஆகியவற்றின் அடிப்படையில் நூல்கள் தோன்றுவதற்கும் இந்நூலின் அடிப்படையே காரணமாக அமைந்ததெனலாம்.

பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து, கிடைத்துள்ள புறத்தொகை நூல்கள் இரண்டனுள் ஒன்றாய், முழுதும் சேர மன்னர் புகழ் பேசுவதாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு மன்னர் மீதும் பாடப் பெற்ற பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பத்துக்களால் அமைந்த இந்நூல் தமிழ் இலக்கிய உலகில் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது. பிறதொகைப் பாடல்கள் இலக்கியத்திற்கு முதன்மையும், வரலாறு போன்றவற்றிற்கு அடுத்த இடமும் தந்து நிற்க, இத்தொகையின் பாடல்கள் இலக்கியத்திற்கும் வரலாற்றுக்கும் ஒத்த சிறப்புத் தந்து விளங்குகின்றன. பிற தொகையில் இடம் பெற்ற புலவர்களுள் சிலர் இத் தொகையிற் பாடியுள்ளாரேனும் இத்தொகைப் பாடல்கள் அரசனை நினைந்து நேரே பாடப் பட்டமையால், நடையிலும் ஒரு செம்மாப்பு விளங்குவதனை நுட்பமாக ஆய்வோர் உணர்வர். இந்த நூலின் முதற்பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்காமற் போனது, தமிழ் இலக்கிய வரலாற்றிற்கும் நாட்டு வரலாற்றுக்கும் ஏற்பட்ட இழப்பேயாகும்.

ஓரரசன் மீது பாடப்பெற்ற ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் என்னும் பெயரில் ஓரமைப்புள்ளது. அதன் முற்பகுதி, மாமன்னன் இராசராசன் காலக் கல்வெட்டுகளிற் காணப்படும் மெய்க்கீர்த்தியினைப் போல அமைந்த பகுதியில், அப்பத்தின் தலைவன், அவனுடைய பெற்றோர், அவன் வீர, ஈரச் சிறப்புக்கள், ஆண்டகால அளவு, பாடியோர், அவருக் களிக்கப்பெற்ற பரிசில், பத்துப் பாடல்களின் பெயர்கள் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. செய்யுளாகத் தொடங்கி உரை நடையில் முடிந்த இப்பதிகங்கள், பத்துக்கள் பாடப் பெற்ற காலத்திற்குப் பின்னர்

அமைக்கப்பட்டனவேனும், நூலுக்கு இன்றியமையாத செய்திகளைத் தந்து விளங்குகின்றன. இப்பதிகங்களே பின்னர்த் தமிழகக் கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தி என்னும் பகுதி அமையக் காரணமாக விளங்கின எனலாம்.

இந்நூலின் நான்காம் பத்தின் பாடல்கள் அந்தாதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும், இப்பத்தும் ஐங்குறு நூற்றின் தொண்டிப்பத்தும் பிற்காலத்தே பெருகி விளங்கும் அந்தாதி எனும் இலக்கியத் தோற்றத்திற்கு முன்னோடியாகும்.

இதில் இடம்பெற்ற பாடல்கள் அனைத்தும் பாடாண்திணை சார்ந்தனவாகலின் திணை துறைக் குறிப்பில் பாடாண்டிணை என்று குறிப்பிடப்படவில்லை. ஒவ்வொரு பாடல் இறுதியிலும் அப்பாடலின் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலிலும் இடப் பெறும் பொருட் சிறப்புமிக்க அரிய தொடர் ஒன்றினைத் தேர்ந்து பாடலின் பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட 'மலைபடுகடாம்' என்னும் பெயர் வழக்கில் இடம் பெற்றவாறு, இப்பாடல்கள் தமக்குரிய பெயர்களால் சுட்டப்படவில்லை. உரையாசிரியர், 'விசயம் தப்பிய என்னும் பதிற்றுப்பத்து ஈகை கூறிற்று' என்று கூறும் போது பாடலின் முதல் தொடரைச் சுட்டியதாகவே தெரிகிறது (தொல். பொருள். 20 ந.மேற்)

பதிற்றுப் பத்திற்குப் பழைய குறிப்புரை ஒன்றுள்ளது. தேவையான குறிப்புக்களைச் சொன் முடிவுடன் கூறிச்செல்லும் அவ்வுரையோடு தம் ஆய்வுக் குறிப்பினையும் சேர்த்து டாக்டர், உ.வே. சாமிநாதையரவர்கள் 1904-இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள். மேலும் சில பதிப்புக்கள் அவரால் வெளியிடப்பட்டுள்ளன. பின்னர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையவர்களும் இலங்கைப் புலவர் பண்டித சு. அருளம்பலவனாரும் விளக்கவுரையும், ஆராய்ச்சியுரையும் எழுதி வெளியிட்டுள்ளனர். வணிக நோக்கில் வந்த உரைகளும் உள்ளன.

பரிபாடல்

சங்கத்தார் தொகுத்தபோது பரிபாடல் 70 பாடல்கள் கொண்ட தொகையாகும்; ஆனால் இப்போது கிடைப்பன 22 பாடல்களே. பழைய சில உரைகளிலிருந்தும், புறத்திரட்டி

னின்றும் இரண்டு முழுப்பாடல்களும், சிலபாடற் பகுதிகளும் கிடைத்துள்ளன என்று சுட்டிப் பதிப்பாசிரியர்கள் அவற்றைப் பின்னிணைப்பாகத் தந்துள்ளனர். கிடைத்துள்ள பாடல்களில் திருமாலுக்கு ஆறும், செவ்வேளுக்கு எட்டும், வையைக்கு எட்டு மாகப் பாடல்கள் அமைந்துள்ளன. கடவுள் வாழ்த்து என அமைந்துள்ள முதற்பாடல் தவிர்த்து எஞ்சிய பாடல் ஒவ்வொன் றின் ஈற்றிலும் பாடல் கருத்தும், பாடினோர் பெயரும், இசைய மைத்தோர் பெயரும், பாடவேண்டிய பண்ணின் பெயரும் (யாழ்) குறிப்பிடப்பட்டுள்ளன. பரிபாடல் இசைவகை என்பதற்கேற்ப அவற்றிற்கு இசை வகுத்தோர் பெயரும், இசையின் (பண்) பெயரும் கொடுத்திருப்பது இந்நூலின் சிறப்பாகும். அக்காலத்தி லேயே இயற்புலமையும் இசைப்புலமையும் தனித் தனியே சிறந்து விளங்கிய மாட்சி இதனால் புலனாகின்றது. இந்நூலில் இடம் பெறும் சில சொற்கள், கருத்துக்கள், பாநடை முதலியவற்றை ஆராய்ந்த அறிஞர் சிலர் இது காலத்தாற் பிற்பட்டது எனக் கூறிய போதிலும் சங்கத் தொகையாகவே புலரும் கருதுகின்றனர். இத்நூலுக்குப் பழைய உரை ஒன்றுள்ளது. பதவுரை பொழிப் புரையாக அமையாவிட்டாலும் தேவையான இன்றியமையாத விளக்கங்களை அளிப்பதாக உள்ள அவ்வுரை நூற்பொருளை உணர்வதற்குப் பெருந்துணை புரிவதாக உள்ளது. இவ்வுரை பரிமேலழகரால் எழுதப்பட்டது என்று கூறப்பட்டாலும், அவருடைய திருக்குறள் உரையோடு ஒத்துக் காண்போர் அக் கூற்றை ஒப்ப இசையார். பழைய உரையோடும், ஒவ்வொரு பாடலின் பொருட் சுருக்கத்தோடும் குறிப்புரையோடும் இந் நூலினையும் டாக்டர் உ. வே. சா. அவர்கள் 1918-இல் முதற் கண் பதிப்பித்தார்கள். இப்போது பெருமழைப் புலவர் எழுதிய உரை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வந்துள் ளது. பிறர் உரைகளும் உள.

கலித்தொகை

கலித்தொகை, கடவுள் வாழ்த்தினை அடுத்து 35 பாடல் கள் கொண்ட பாலைக்கலி சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ என்பாராலும், 29 பாடல்கள் கொண்ட குறிஞ்சிக்கலி கபிலராலும் 35 பாடல்கள் கொண்ட மருதக்கலி மதுரை மருதன் இளநாகனாராலும், 17 பாடல்கள் கொண்ட முல்லைக்கலி சோழன் நல்லுருத்திரனாலும், 33 பாடல்கள் கொண்ட நெய்தற்கலி

நல்லந்துவனாராலும் இயற்றப்பட்டு அந்த நல்லந்துவனாரால் தொகுக்கவும் பட்டுள்ளது. தொல்காப்பிய உரையாளருள் ஒருவராய நச்சினார்க்கினியர் இந்நூல் முழுவதற்கும் சிறப்பான உரை வரைந்துள்ளார். அவர் உரையோடு இத்தொகை நூலினைத் திரு சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் 1887-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். பின்னர் இ.வை. அனந்தராமையரவர்கள் மூலத்தையும் உரையையும், மிக்க விரிவும் விளக்கமும் சான்றதம் ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும், அரும்பத அகராதியோடும் மூன்று சம்புடங்களாக, அழகுறப் பதிப்பித்தார்கள். பின்னர் இளவழகனார் குறிப்புரையோடு மூலத்தையும் உரையையும் கழகம் தன் வெளியீடாக வெளிப்படுத்தியது. மேலும் சிலர் பொழிப்புரையோடும் குறிப்புரையோடும் பதிப்பித்துள்ளனர்.

அகநானூறு

கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 நெடிய அகவல்களால் ஆக்கப்பட்டுள்ள அகநானூறு நெடுந்தொகை எனவும் வழங்கப்படும். இதனைப் பாடியவர்களாக 142 புலவர்கள் (மாரே பதிப்பு) அறியப்படுகின்றனர். பிற தொகைகளிற் காணாமல், இதற்கு மட்டுமே அமைந்துள்ள, சிறப்பாக இந்நூலிலுள்ள, பாக்களை வகை செய்யப்பட்டுள்ளமையினைக் குறிப்பிடலாம். கடவுள் வாழ்த்து நீங்கலாக உள்ள நானூறு பாடல்களில் முதல் 120 பாடல்கள் 'களிற்றியானை நிரை' எனவும், அடுத்துவரும் 180 பாடல்கள் 'மணிமிடை பவளம்' எனவும், எஞ்சிய 100 பாடல்களும் 'நித்திலக்கோவை' எனவும் பெயரிட்டுப் பகுக்கப்பட்டுள்ள பாகுபாடே அச் சிறப்பாகும். இந்நூலைப் பற்றிக் கூறும் பழைய குறிப்பு, 'வண்டு படத்ததைந்த கண்ணி' என்பது முதலாக, 'நெடுவேள் மார்பின் என்பது ஈறாகக் கிடந்த பாட்டு நூற்றிருபதும் களிற்றியானை நிரை எனப்படும். இப்பெயர் காரணத்தால் பெற்றது. இது பொருட் காரணமாகக் கொள்க! என்று கூறுகிறது. மேலுமஃது இவ்வாறே பிற இரு பகுதிகளையும் சுட்டி, அவை முறையே, 'செய்யுளும் பொருளும் ஒவ்வாமையால்' என்றும், 'செய்யுளும் பொருளும் ஒக்கும் ஆதலான்' என்றும் காரணம் கூறியுள்ளது. இக்குறிப்பின் பொருத்தச் சிறப்பை இது காறும் யாரும் விளக்கமாக ஆய்ந்து கூறியதாகத் தெரியவில்லை.

இவ்வகைப்பாடு பற்றிய விவரம், இடையள நாட்டு மணக்குடியான் பால் வண்ண தேவனான வில்லவதரையன் என்பானால் இத்தொகைக்கு எழுதப்பட்ட பாயிரத்தில் காணப்படு

கிறது. மூன்று பிரிவுகட்கும் கொடுக்கப்பட்டுள்ள பெயர்களால் உணர்த்தப்படும் பொருட் சிறப்பை நோக்குங்கால், இவ்வமைப்பு பாடல்களில் இயல்பாக அமைந்துள்ள யாப்பணி நயங்களினும் மேலாக விளங்கும் அழகுணர்வுப் பாங்கினை உணர்த்துவதாக அமைந்திருப்பதனைக் காணலாம். களிற்றியானை பல நிரல்படச் செல்லுங்கால் உணரப்படும் நடைப்பெருமிதமும், வண்ண வடிவால் மாறுபட அமையும் மணிகளின் நிரலில் காணப்படும் கலவை வண்ணக் கவினும், மெத்தெனும் ஊற்றின்பம் நல்கி ஒளிரும் முத்துக் கோவையில் புலனாகும் தண்மை சான்ற மென்மையும் போல, இத்தொகைப் பாடல்கள் தம் சொல்லாலும் பொருளாலும் உணர்த்தும் நடைப்பாங்கு வெளிப்பட்டுப் பயில் வோரை இன்புறுத்துவதாக உள்ளது. இதனால் ஒலிச் சேர்க்கை யாக விளங்கும் சொல்லடுக்கோ, உணர்வினை வெளிப்படுத்து வனவாகக் கருதப்படும் சொற்கூட்டோ சிறந்த கவிதையாகாது என்பது பழந்தமிழர் கவிதைக் கோட்பா தென்பதனை உணர லாம். தமிழ்க் கவிதையுலகில் இடம் பெற விழையும் புதுக்கவிதை யாளர்களும், ஐக்கூக் கவிதையாளர்களும் இதனை உணர்வது அவர்தம் படைப்புக்கள் வளம் பெறற்கு உதவியாக அமையும். இத்தொகையில் பின்பற்றப்பட்டுள்ள திணை வரிசையால் பாடல் கள் முன்பின்னாக மாறுபடும் வாய்ப்பில்லை.

அகநானூற்றின் முதல் 90 பாடல்கட்குக் குறிப்புரையாக அமைந்த பழைய உரை ஒன்றுள்ளது. அவ்வுரையோடு தம் குறிப்புரையையும் சேர்த்து இராசகோபாலார்யன் என்பார் முதலில் களிற்றியானை நிரையையும் அடுத்துப் பிறபகுதிகளை யும் வெளியிட்டார். பதவுரை, மேற்கோள், விளக்கம் போன்ற வற்றோடு, 'வேங்கட விளக்கு' என்னும் பெயரில், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை ஆகிய இருவரும், விளக்கவுரை வரைந்து, முதற்பகுதியை 1943 ஆம் ஆண்டிலும் எஞ்சியவற்றை 1944, 1946 ஆகிய ஆண்டுகளிலும் கழக வாயிலாகப் பதிப்பித்தனர். பின்னர்க் கழகமே பெருமழைப் புலவரைக் கொண்டு ஓருரை வரைந்து வெளியிட்டது. வணிகமுறை உரைப் பதிப்புக்களும் வெளிவந்தன.

ஓரகத் துறைச் செய்தியை உணர்த்த அடிகள் குறைந்த ஐங்குறு நூறு அல்லது குறுந்தொகைப் பாடலளவே போதுமான தாயிருக்க, அவற்றின் மிக்க பல அடிகள் அமைத்துப் பாடும் போதெல்லாம் முதல் கருப்பொருள் வருணனைகளே மிக்கமையும்

முன்னர்க் காட்டப்பட்டது. அதனால் நெடுந்தொகைப் பாடல்களால், உரிப்பொருள் மாட்சியேயன்றி முதற் கருப்பொருள் களின் சிறப்புக்களையும் விரிவாக உணரமுடிகின்றது. அரசர், வள்ளல், வீரர் போன்றார் பலர் சிறப்புக்களை இந்நூல் உணர்த்து கின்றது. குறுந்தொகையால் ஏறத்தாழ 25 பேர்களையும், நற்றிணையால் ஏறத்தாழ 48 பேர்களையும் மட்டுமே பாடப் பட்டோராக அறியக் கிடக்க, அகநானூற்றால் ஏறக்குறைய 125 பேர் அறியப்படுகின்றனர். இவ்வாறே ஊர்கள், உயிரினங்கள், நிகழ்ச்சிகள் போன்றனவும் பெருமளவில் உணரக் கிடக்கின்றன.

புறநானூறு

பழந்தமிழரின் வரலாறு, பண்பாடு போன்றவற்றை உணர்த்த வல்ல இலக்கியச் சான்றுகளுள் மிக்க தொன்மையும், சிறப்பும் வாய்ந்தது புறநானூறாகும். இதனை டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஆராய்ந்து முதலில் 1894-ஆம் ஆண்டு வெளியிட்டார்கள். அடுத்து அவர் மேலும் பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் அதனைப் பதிப்பித்துள்ளார்கள். இந்நூலின் 1-முதல் 266 முடிய உள்ள பாடல்களுக்கு அருமையான ஒரு பழைய உரை கிடைத்துள்ளது. அதனைக் கொண்டு பல பழைய பழக்க வழக்கங்கள் மரபுகள் போன்றவற்றை அறிய முடிகிறது. பின்னர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் பழைய உரை யோடும், அவ்வுரை இல்லாத பிறபாடல்களுக்குத் தாமே வரைந்த உரையோடும் இந்நூலினை வெளியிட்டுள்ளார்கள். வணிக முறையில் எழுதப்பட்ட உரையோடும் சில பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. தொடக்கத்தில் டாக்டர் உ.வே.சா. ஐயரவர்கள் இதனைப் பதிப்பிக்குங்கால் கிடைத்த பிரதிகளுள் ஒன்றிலேனும் இந்நூல் 267, 268-ஆம் பாடல்களின் மூலமேனும் உரையேனும் காணப்படவில்லை; என்று குறிப்பிட்டுள்ளார்கள். பின்னர் ஏடு பார்த்துப் பதிப்பித்தாகக் கூறப்படும் எப்பதிப்பிலும் அப்பாடல் கள் இடம் பெறாமையின், அது கொண்டு ஐயரவர்கள் உழைப்பின் அருமையினையும், நம்பகத் தன்மையையும் உணர முடிகின்றது.

பத்துப் பாட்டு

பத்துப் பாட்டில் முருகாற்றுப் படை முதல் மலை படுகடாம் முடியப் பத்து நெடும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இத் தொகுப்பும் புறநானூற்றினைப் போலவே பழந்தமிழ்ச் சமுதாயம் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றது. கலித்தொகைக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர் இப் பத்துப்பாட்டிற்கு வரைந்த

உரை முழுதுமாய்க் கிடைத்திருப்பது பெரும்பேறாகும். இதன் கண் அமைந்த பத்துப் பாடல்களுள் ஐந்து பாடல்கள் ஆற்றுப் படையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆற்றுப்படை என்பதற்குப் 'பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கம்' என்று தொல்காப்பியம் இலக்கணம் கூறும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பரந்த நோக்கிலமைந்த குறிக்கோள் வாசகம் தோன்றுதற்கு அடிப்படையாக அமைந்தது ஆற்றுப்படையாகும். அவ்வகையில் பத்துப் பாட்டுள் திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறு பாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப் படை (மலைபடு கடாம்) என ஐந்து பாடல்கள் ஆற்றுப்படை யாக அமைந்து தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பினைக் காட்டி நிற்கின்றன.

முடிப்புரை

பயில்வார் அருகிய நிலையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஏடுகளில் முடங்கிப் பொடிந்தும் ஒடிந்தும் உருக்குலைந்து, தம் இறுதி அழிவைச் சந்திப்பதற்காக, ஆடிப் பெருக்கையும், கறையான் படையையும், கனல் பிழம்பையும் எதிர்பார்த்துக் கிடந்த சங்க இலக்கிய ஏடுகள், அந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலும் அடுத்த காலப்பகுதியிலும் திரு.சி.வை. தாமோதரம்பிள்ளை, பவானந்தர், சௌரியப்பெருமாள் அரங்கர், டாக்டர் உ.வே. சாமிநாதையர், இ.வை. அனந்தராமையர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் போன்ற அறிஞர் பெரு மக்களின் அயரா முயற்சியால் அச்சுருப் பெற்றுப் பதிப்புலகில் கால் கொள்ளலாயின. அதன் பயனாக அவை, அழிவினின்றும் விடுதலை யெய்தி அமர நிலை எய்தும் வாய்ப்பினைப் பெற்றன. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகப் பதிப்பு வரலாற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் பயனாகப் பொதுவாகத் தமிழிலக்கியங்கள்,குறிப்பாகச் சங்க இலக்கியங்கள் அறிஞர்களிடையே செல்வாக்குப் பெறலாயின. பள்ளி கல்லூரி போன்ற கல்வி நிலையங்களில் தமிழ்ப் பாடப் பகுதியாகவும், தனியே பண்டிதர், வித்துவான், புலவர், வகுப்புக் கல்வியாகவும், பி.ஏ.,எம்.ஏ, பட்டக்கல்வியாகவும் தமிழ் இடம் பெற்றபின் சங்க நூல்கள்களின் தனிப்பெருமை பரவலாயிற்று.

சங்க நூல்கள் செய்திகள் பற்றி தனித்தனி ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் தோன்றலாயின. சங்கப் பாமணிகள்

நன்கு மண்ணப் பெற்றுப் பட்டை தீட்டப்பட்ட அளவில் அவற்றி னின்றும் இலக்கிய ஒளியே யன்றி வரலாறு, சமுதாயவியல், பொருளியல் போன்ற வாழ்வியலின் பன்முக ஒளியும் பாங்குறத் திகழலாயின.

சங்கப் பாடல்களுக்கும் சங்கத் தொகை நூல்களுக்கும் இடையே தெளிவான வேறுபாடு உண்டு என்றும், சங்கத் தொகைகள் தொகுக்கப்பட்டதற்கு மிக முன்னரே அவை பாடப் பட்டன என்றும் கூறித் சங்கத் தொகை நூல்களின் காலத்தைப் பிற்படுத்திக் காட்ட முற்பட்ட ஆய்வாளரும் உள்ளனர். சங்க இலக்கியம் என்று கூறுவது ஒரு தவறான வழக்கு என்பதில் ஐயமில்லை என்றும், அதிலடங்கிய நூல்களை இப்பெயரால் குறிப்பது ஒரு மரியாதை வாசகமே யாகும் என்றும் கருதி ஆங்கிலத்தில் எழுதியவர், (No doubt the term later sangam literature is a misnomer; we call these works by this name only by courtesy; History of Tamil of Language and literature Pg. 34 Prof S. Vaiyapuripillai (1956) முன்னர், சங்க நூற்பாடல்கள் அனைத்தையும் அவற்றின் ஆசிரியர் வரிசையில் தொகுத்துச் சமாசத்தார் வெளியிட்டபோது, அவற்றைத் தொகுத்துப் பதிப் பிக்கும் பொறுப்பினை ஏற்றுச் செயற்பட்டு, அதற்குச் 'சங்க இலக்கியம்' என்று பெயர் கொடுத்து வெளியிட்டிருப்பதனை நினைவிற் கொள்ளவேண்டும்!

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் சங்க இலக்கியங்களின் அனைத்துமே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்படும் முயற்சி அறிஞர் பலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில், பாட்டும் தொகையுமாக அமைந்த சங்க நூல்கள் ஆங்கிலப் பெயர்ப்பு வடிவிலும் உலக இலக்கிய அரங்கினை அணி செய்யக்கூடும். வாழ்வியற் கூறுகளில் வளர்ந்து வரும் புதிய துறைகளான உளவியல், சமுதாயவியல் போன்ற வற்றின் ஒளியோடும் இந்நூல்கள் ஆராயப்பட வேண்டியுள்ளன. புதிதாகக் கிடைத்து வரும் தொல்லியல், அகழ்வாய்வியல், கல் வெட்டியல் உண்மைகளால் சங்க இலக்கியம் கூறும் கருத்துக்கள் உறுதிப்படுவது போலப் பிற துறை ஆய்வு முடிவுகளின் துணை யோடு எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் சங்க இலக்கிய ஆராய்ச்சிகள், தமிழ நாகரிகத்தின் புதிய பரிமாணங்களை உணர்த்துவனவாக அமையும் என்பதில் ஐயமின்று.

---

1. Prof. S. Vaiyapuripillai, History of Tamil Language and New century Book House - *1956*, Page. *55*
2. மேலது பக். 33

ஆங்கிலத்தில் அகநானூறு

—பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி

Poem no - 2

(The companion of the heroine speaks to the hero during night tryst insisting upon early marriage)

Oh the lord of the mountain where a male monkey drinks
Mistaking for water the intoxicating toddy
That gets duly fermented in the deep spring amidst the rocks
Out of the sweet fruit that fell off the heavy branches.
Of a banana tree of fertile leaves and the sweet juice
Of the drupes of jack fruit that prevents men
From tasting other fruit and enjoys blissful sleep
On the bed of fragrant blooms laid in several layers
Disabled from climbing up a nearby sandal tree
Entwined by pepper vines!
Such unexpected pleasure is within the reach of
Manifold animals of your hill; if this is so,
How could it be rare for you to attain
The pleasure that you strive hard for?
The heart of my beloved friend, whose shoulders
Are broad and beautiful like the bamboo
Stays not and goes out of control and rushes toward you.
So you may come here by night as well
At the opportune moment when the very vigilant watchmen
Of her father's house become less cautious.
Behold the Venkai trees amidst the verdiscent bushes!
They are in full bloom now with bunches radiant and fragrant!
More than this, the great white-rayed moon
Has reached its full stature!

KAPILAR

(பகற்குறிக்கண் செறிப்பறிவுறீஇத் தோழி வரைவு கடாயது).

கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொ டூழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்

அறியா துண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்து நாட

குறித்த இன்பம் நினக்கெவன் அரிய
வெறுத்த வேஎர் வேய்புரை பணைத்தோள்
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளும் இனைய ளாயின் தந்தை
அருங்கடிக் காவலர் சோர்பதன் ஒற்றிக்

கங்குல் வருதலும் உரியை பைம்புதல்
வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே.

— கபிலர்

திருவாசகம் கூறும் 'கோகழி' யாது?

— பேரறிஞர். பெ. சுப்பிரமணியன்

முன்னுரை :

திருவாசகம் இறைவனருளால் தமிழர்க்குக் கிடைத்த தெய்வத் தமிழ் மறை. சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாந் திருமுறையாகப் போற்றப்பெறும் இது அனுபவ ஞானத்தை விளக்கும் நூல். ஆன்மாவைக் கனியச் செய்து, பத்திவழியில் படிப்படியாக உயர்ந்து ஞானம் பெறச் செய்து இறைவன் திருவடியடைய வழிகாட்டும் நூல்.

> "திருவாசகமானது, சொற்பதங்கடந்ததும் நிலையுள்ளது மான பேரானந்தத்தை மாணிக்கவாசகர் பெற உதவிய வாழ்க்கை முறைகளையும் ஆன்மிக அனுபவங்களையும் எடுத்துரைக்கும் சுயசரிதையாகும். ஆனந்த் பரவசமாக்கும் பாடல்களாலும் இசைகளாலும் சமய உயர்ச்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் வெள்ளப் பிரவாகமாகப் பொழியும் நூலாகும் திருவாசகம். அந்நூலை மெய்ஞ்ஞானயியலைச் சார்ந்த இறையியலை விளக்கும் மிகப் பொருத்தமான வழிகாட்டிக் கையேடு என்று கருதலாம்"

என்று வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர் 'தமிழ் இலக்கியமும் அதன் வரலாறும் - ஓர் ஆராய்ச்சி' என்ற நூலில் குறிப்பிடுவதாகக் கோ.வன்மீகநாதன் குறிப்பிடுகின்றார்.[1] திருவாசகத்தை வேதத்துடன் ஒப்பிட்டு, அதனைவிடச் சிறந்தது என்று சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்.[2] அனுபூதி என்னும் மெய்ஞ்ஞான இயலை (Mysticism) விளக்கும் இந்நூலுக்கு உரையெழுதிய சான்றோர் கருத்துக்களில் பொருள் வேறுபாடு காணமுடிகிறது. அத்தகைய சொற்களில் 'கோகழி' என்னும் சொல் குறித்து அறிஞர்கள் கூறும் கருத்துக்களை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவாசகத்தில் 'கோகழி' சொல்லாட்சி :

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் ஐந்து இடங்களில் இச் சொல்லை ஆண்டிருக்கிறார். அவை,

1. கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க.
1. சிவபுராணம் அடி-3.

2. கோகழி மேவிய கோவே போற்றி.
4. போற்றித் திருவகவல்-அடி 157.

3. இன்பந் தருவன் குயிலே ஏழுலகும் முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி நாதனைக் கூவாய்!
18. குயில்பத்து-6 (351)

4. பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத் - தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மாறுரை.
48. பண்டாய நான் மறை-1 (626)

5. நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் - பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.
48. பண்டாயநான்மறை-5 (630

மேற்கண்ட ஐந்து இடங்களிலும் 'கோகழியாண்ட குருமணி', 'கோகழி மேவிய கோ', 'கோகழிநாதன்', 'கோகழிஎங்கோமான்', 'கோகழிக்கரசு' என இச்சொல் இடம்பெற்றுள்ளது.

கோகழி பற்றிய நான்கு கருத்துக்கள் :

கோகழி என்பதை ஊர்ப்பெயராகக் கருதும் அறிஞர்கள் நான்கு வகையாகக் கூறுகின்றனர். அந்நான்கு கருத்துக்கள் வருமாறு.

1. கன்னட நாட்டில் உள்ள கோகழி என்னும் ஊர்.
2. கழுமலம் - சீகாழி
3. திருவாவடுதுறை
4. திருப்பெருந்துறை,

1, கன்னட நாட்டுக் கோகழி :

திருவாசகம் 630-ஆம் பாட்டில், கோகழி, பெருந்துறை என்னும் இரண்டு இடங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால் இரண்டும்

வெவ்வேறு தலங்கள் என்று முடிவு செய்து, இவ்வூர் கன்னட நாட்டில் பெல்லாரி மாவட்டம், அடகள்ளி வட்டத்திலுள்ள ஓர் ஊரே என்று ஆராய்ந்து ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு அவர், முற்காலத்தில் கன்னடநாடு தமிழ் வழங்கும் பகுதியாகவும், வீரசைவம் விளங்கும் பகுதியாகவும் திகழ்ந்த காரணத்தையும் காட்டினார். மேலும் கன்னட மொழிக் கல்வெட்டுக்கள் சில கி.பி. 1158ல் வீரபாண்டிய தேவன் கோகழி நாட்டை ஆண்டான் என்று கூறும் சான்றையும் அவர் கொண்டார். இவர் கருத்தை அறிஞர் திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் எளிமையாக மறுக்கிறார். தென்பாண்டிநாட்டு வாதவூரில் தோன்றி, மதுரையில் அமைச்சுத் தொழில் நடத்தித் திருப்பெருந்துறையில் சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்றுச் சோழநாட்டில் தில்லைப் பெருமான் திருவடியில் இரண்டறக் கலந்த மாணிக்கவாசகர் கன்னட நாட்டில், அவர் காலத்திற்கு முன்பும் பின்பும், இன்றும்கூடத் தமிழ்நாட்டில் சமயத் தொடர்போ, இலக்கியத் தொடர்போ பெறாத இச்சிற்றூரை வணங்கிப் பல பாடல்களில் குறிப்பிட்டார் என்பதைச் சைவர் யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார் என்று கூறி, மாணிக்கவாசகரால் பெருமையுடன் கூறப்பட்ட கோகழி என்ற பெயரில் ஓர் ஊரைப் பிற்காலத்தில் 12-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தியிருக்கலாம் என்றும் அறிஞர் மு. அருணாசலம் கருதுகின்றார். மாணிக்கவாசகர் வரலாற்றுடன் ஒப்ப நோக்கும்போது இக்கருத்து ஆய்வுக்கு ஏற்புடையதாகத் தோன்றுதலின் மாணிக்கவாசகர் குறிப்பிட்ட கோகழி கன்னட நாட்டினைச் சார்ந்ததன்று என முடிவு செய்யலாம்,[3] என்பது அவர் கருத்து.

2. சீகாழி என்னும் கருத்து :

பாடல் 630இல் குறிப்பிட்டிருக்கும் இரண்டு இடங்களும் வெவ்வேறு ஊர்கள் என்று பிறர் கருதியதுபோலவே வே.மு. சீனிவாச முதலியார் என்பவரும் கருதி, கோகழி என்பது சிவபுரம், கழுமலம் என்னும் காழியையே குறிக்கும் என்றார். மேலும் அவர் கொழுமை + கோடி என்ற இவ்விரு சொற்களும் கூடிய மரூஉவின் பாத்தியாய்த் திரிந்து ஒரு சொல் நேர்மைத் தாய்க் கொகுடி என நின்றாற்போல, கொழுமை + காழி என்ற இவ்விரு சொற்களும் கூடி கோகழி என நின்று வளமுடைய காழிநகர் எனப் பொருள் தந்து நின்றன என்று விளக்கம் தந்தார். திருஞான சம்பந்தர் கழுமலத்தின் பன்னிரு பெயர்களுக்கும் தனிப்பதிகமே பாடியவர்

காழியென்று எங்கும் சொன்னாரேயன்றி, ஓரிடத்தும் கோகழி எனச் சொன்னதில்லை என்றும், கழுமலமதனில் காட்சி கொடுத்தார் என்றால், அடிகள் குறிப்பிடும் பிற ஊர்களிலும் காட்சி கொடுத்தார் என்று ஆராய்வது முடிவில்லாதது ஆதலின், அடிகள் குருவருள் பெற்ற கோகழி சீகாழி என்பது பொருந்தாது என்று அறிஞர் மு. அருணாசலம் கூறி மேற் கருத்தை மறுப்பதும் பொருத்தமாகத் தோன்றுவதால் கோகழி சீகாழியன்று எனக் கருதலாம்.[4]

3. திருவாவடுதுறை என்னும் கருத்து :

முதன் முதலாக உரை வெளியிட்ட வாசுதேவ முதலியார் திருவாவடுதுறை என்று குறிப்பிட்டார். பின் வந்தோராகிய முருகேச முதலியார், மாசிலாமணி முதலியார் ஆகியோர் அப்படியே எழுதிவிட்டனர். திருவாசகம் 630 ஆம் பாடலில் பெருந்துறை, கோகழி என்ற இருபெயர்கள் வருவதால், கா. சுப்பிரமணியபிள்ளை, இராமநாதபிள்ளை, டாக்டர் போப் போன்ற பலரும் இவ்விடத்தில் இடர்ப்பட்டுத் திருவாவடுதுறை என்று குறித்தனர். நவநீத கிருட்டிண பாரதியார், திருவாவடுதுறை எனக் குறிப்பிட்டு, 'கோகழிக் கரசை' எனக் கூறியிருப்பது, திருவாவடுதுறையின் தல விருட்சம் அரசாதலின், இது ஆங்குள்ள சிவபோதியாகிய அரச மரத்தையே குறிக்கும் என்றார். ஆனால் பெருமான் அடிகளைக் குருந்த மரநிழலில் ஆட்கொண்டார் என்னும் வரலாற்றடிப்படைக்கு இது முரணாதலின் இக்கருத்து ஏற்புடையதன்று என்பது அறிஞர் மு. அருணாசலம் கருத்து. மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் தருமபுரம் பதிப்பில் கோகழி என்பதற்குத் திருப்பெருந்துறை எனக் குறிப்பிட்டு, திருவாவடுதுறை உரைப்பதிப்பில் திருவாவடுதுறை எனக் குறித்தால் ஆதீனத்திற்குப் பெருமை சேர்க்கும் எனக் கருதி, விருப்பின் காரணமாகத் திருவாவடுதுறை என்று பொருள் கூறினார். மேலும் மாணிக்கவாசகர் திருவாசகத்துள் திருவாவடுதுறையை எங்கும் குறிப்பிடவில்லை; அருகிலிருக்கும் திருவிடை மருதூரைக் குறித்துள்ளார். ஆகவே, அவர் திருவாவடுதுறையை அதன் இயல்பான பெயரால் குறிப்பிடாமல் வேறு பெயரால் குறிப்பிட்டார் என்று கருதுவது அறிவுக்குப் பொருத்தமாயில்லையென்று கூறி, கோகழி என்பதற்குப் பொருள் திருவாவடுதுறை என்பார்தம் கருத்தையும் அறிஞர் மு. அருணாசலம் மறுக்கிறார்.[5]

4. திருப்பெருந்துறை என்னும் கருத்து :

கோ - பெரிய; கழி - துறை எனக்கூறும் விளக்கத்தால் கோகழி என்பதற்குப் பெருந்துறை என்றே அறிஞர் பலரும் உரையெழுதினர். கா. சுப்பிரமணியபிள்ளை, க. வே. நெல்லையப்பப்பிள்ளை போன்றோர் இவ்வாறு கூறினர். திருவாசகத்தின் முதல் பகுதி சிவபுராணம் இது திருப்பெருந்துறையில் அருளியது என்பது அதன் வரலாறு. சிவபுராணத்தின் முதல் மூன்று அடிகள்,

> "நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
> இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
> கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க"

என வருவன. இத்தொடக்க அடிகள் பொருள் பொதிந்தவை 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்தை இறைவன் திருநாமமாகவும், அவனது மந்திர வடிவாகவும் கொண்டு பெருமானை முதலடியில் வாழ்த்திப் பின்னர், அவன் திருவடியை வாழ்த்தி, அவன் இமைப்பொழுதும் தமது நெஞ்சத்துள் நீங்காது நின்ற நிலைமையையும் வாழ்த்துகிறார். இப்படிப்பட்ட இறைவன் குருநாதனாக எழுந்தருளி வந்து கோகழியில் தம்மை ஆட்கொண்டருளினான் என்று மூன்றாவாக அந்தக் குருமூர்த்தத்தை வாழ்த்துகிறார். திருவாசகத்தில் முதன் முதலான வரும் இடப்பெயர் கோகழி. பெருமான் பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டவன் என்ற நினைவுடன் மாணிக்கவாசகர் பாடினார் என்பது கருத்து. எல்லா வரலாறுகளும் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் பெருந்துறையில் அருள் செய்தான் என்றே கூறுகின்றனவாதலின் இதுவே பெருத்தமானது; ஒரே பாடலில் பெருந்துறை, கோகழி என்னும் சொற்கள் வருதலால் மயங்க வேண்டியதில்லை. பெருந்துறை என்பது தலப்பெயர்; (ஊர்ப்பெயர்) கோகழி என்பது கோயிலுக்கு உரிய பெயர் என்ற பல்வேறு தலங்களுக்கும் அங்குள்ள கோயில்களுக்கும் தனித்தனிப் பெயர்கள் இருப்பதை வெண்ணெய்நல்லூர் - அருட்டுறை; நறையூர் - சித்தீச்சுரம் ஆகியவற்றால் எடுத்துக்காட்டி, மறைமலையடிகள் போன்றோர் தம் கருத்துக்களையும் தமக்கு ஆதரவாகக் கொண்டு மு. அருணாசலம் கூறினார்.6

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய திருப்பெருந்துறைப் பெருந்துறைப்படலத்தின் 79-ஆம்

பாடல் குருத்தின் கீழ் அமர்ந்த மறையவராக வந்து இருபனையளவு ஆழம் அகழ்ந்தாலும் நீர் ஊறாத இந்த நிலத்தில் ஒரு வெட்டு வெட்டியவுடன் குமிழியெடுத்து நீர் பெருகியமையால் இவ்விடம் பெருந்துறையாயிற்று என்ற காரணத்தைக் கூறுகிறது. நீரில்லாத அப்பகுதியில் பொய்கை இருந்தால் சிறப்பித்துப் பேசுதல் தக்கதே. மறைமலையடிகளும் பெருந்துறை என்பதற்குத் திருவாசகம் அருட்பத்தில் வரும், ''திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறை'' எனவரும் பாடலைக் காட்டிப் பொய்கை என்ற பொருளைக் கூறினார். எனவே, பொய்கையால் பெயர் பெற்ற பெருந்துறை என்பது ஊர்ப்பெயராகவும், கோகழி இவ் வூரிலுள்ள கோயில் என்றும் கொண்டு மாணிக்கவாசகர் கோகழி எனக் குறித்தது திருப்பெருந்துறைக் கோயிலையே என்று மு. அருணாசலம் முடிவு செய்தார்.[7]

கோகழி என்பதற்குப் புதிய விளக்கம்:

திருவாசகத்திற்கு உரையெழுதிய சுந்தர மாணிக்க யோகீஸ்வரர், 'கோகழியில் தண்டமும் சக்கரமும் அடங்கியிருக்கின்றன' என யோகப் பொருள் உரைத்து,

'மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்
கோலால் நடத்திக் குறிவழியே சென்று
பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றினால்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே'[8]

என்னும் திருமந்திரப் பாடலையும் மேற்கோள் காட்டி விளக்கம் கூறினார். ஆயினும், அவர் உரை எளியோர்க்குத் தெளிவில்லாததாய் அமைந்தது.

திருவாசகமும் சிவராஜயோகமும் என்ற நூலையெழுதிய திருவாரூர்ச் சிவ யோகி மா. இரத்தின சபாபதி பிள்ளையவர்கள் தமது நூலில் கோகழி என்னும் சொல்லுக்குத் தரும் யோகப் பொருள் புதிய விளக்கமாகத் திகழ்வதை உணரலாம்.

'கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க'
''கோ—அரசன்; கழி - கோல்; குருமணி-ஒளிவிட்டு நிற்பவன்

தேகத்தின் அரசன் ஆன்மா. ஆன்மாவின் தலைவன் இறைவன். இறைவன், ஆன்மாக்களைச் செலுத்தும் கோல் என்பது, மூலாதாரத்தையும் சகஸ்ரதளத்தையும் இணைத்து

நிற்கும் முதுகந்தண்டாகும். இந்த முதுகந்தண்டின் அடிப்பாகத்தில் மூலாதாரச் சக்கரம் உள்ளது. மேல்பாகத்தில் சகஸ்ரதளம் உள்ளது.சிவன் உயிர்கள் அறியாமையில் உள்ளபோது அவற்றை இடா நாடி, பிங்கலா நாடி என்ற அவனது திருவடியால் நடத்துகிறான். ஞானியான போது இருநாடிகளின் தன்மையும் மாறிச் சுழுமுனா நாடி பிரகாசத்தை அடைகிறது'[9] என்னும் சிவயோகியின் விளக்கம் சிந்திக்கத் தக்கது.

ஆன்மா குருவருளால்தான் ஞானத்தைப் (ஒளியைப்) பெற முடியும். ஆன்மாவிற்கு ஒளிவழிகாட்டி, யோக சாதனையைச் செய்வதற்குரிய பயிற்சியை அளித்தல்தான். குரு ஆன்மாவை ஆட்கொள்ளலாகக் கருதப்படுகிறது. இச் செயலுக்குரிய இடம் (தீட்சைக்குரிய இடம்) புருவ நடுவாகிய சுழுமுனைத் தலம். இத்தலத்தில் இறைவன் ஒளிமயமாக நின்று ஆன்மாவுக்கு இன்பத்தை வழங்குகின்றான். இவ்வாறான கருத்துக்களை யோக நூல்கள் விரிவாகப் பேசுகின்றன.

> ''இருமூக்கினுட் செல்லுகின்ற பிராணனை அந்நடுநாடியில் நன்கு தடுத்து நிறுத்துவாயாக. அந்நாடியில் பிராணன் நீடித்து நிலைபெறுதலை அனுபவித்த பின்னர் மெதுவாகவே வெளியில் விடப் பயில்வாயாக. குதத்தினது பின்பக்கத்தில் வீணா தண்டத்தைப் போன்று ஓரெலும்பு உளது .அதுவே உடலைத் தாங்கி நிற்பதாகும். அந்நீண்ட எலும்பானது உடலை அளந்து நிற்கின்றது. அவ்வெலும்பையே பிரம்ம தண்டமென்று சொல்லப்படுகிறது அதனுள்ளில் அதிசூக்குமானது வாரமுள்ள சுழுமுனா நாடி உளது. அச்சுழுமுனா நாடியே அறிஞர்களால் பிரம்ம நாடி எனக் கூறப்படுகிறது. அந்தப்பிரம்ம நாடியே இடைபிங்கலைகளின் மத்தியில் சூரிய வடிவாய் விளங்குகின்ற சுழுமுனா நாடி என்று அறிக''10

என்பது யோக சிகோபநிடதம்.

ஆகவே மூலாதர்ரம், சகஸ்ரதளம் என்னும் இரண்டையும் இணைக்கும் முதுகந்தண்டாகிய கோல் வழியே ஆன்மாவை ஆட்கொண்ட குருமணியின் திருவடிகள் வாழ்க என்பது புதிய விளக்கமாக அமைகின்றது. ஆதலின் கோகழி என்னும் சொல் உடம்பின் (ஆன்மாவின்) முதுகந்தண்டினைக் குறிக்கும் என்னும் சிவயோகியின் கருத்து சிந்தனைக்குரியது.

முடிவுரை :

இதுகாறும் கண்டவற்றால் கோகழி என்ற சொல்லுக்கு அறிஞர்கள் கூறிய நான்கு வகையான ஊர்ப்பெயரைக் குறிக்கும் கருத்துக்களையும், இக்கருத்துக்களுக்கு மாறாக, யோக அடிப்படையில் கூறப்பட்ட கருத்தினையும் அறிய முடிந்தது. இக் கருத்துக்களின் உண்மை மேலும் ஆய்ந்து அனுபவத்திற் காணத் தக்கது.

அடிக்குறிப்புக்கள்

1. கோ. வன்மீகநாதன், மாணிக்கவாசகர் பக்கம் 28
2. துறைமங்கலம் சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பாடல்-4
3. மு. அருணாசலம், திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் பக்கம் 31-35,
4. மேற்படி நூல் பக்கம் 36-37
5. மேற்படி நூல் பக்கம் 41-43
6. மேற்படி நூல் பக்கம் 44-49
7, மேற்படி நூல் பக்கம் 50-51
8. திருமந்திரம் பாடல் 1956.
9. சிவ யோகி மா. இரத்தின சபாபதி பிள்ளை, திருவாசகமும் சிவராஜ யோகமும் பக்கம் 25.
10. யோக சிகோபநிடதம், 6 6-9.

துணை நூல்கள்

1. திருமந்திரம்.
2. திருவாசகம்.
3. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், நால்வர் நான்மணிமாலை கழகம், சென்னை, 1960
4. அருணாசலம். மு. திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புகள், சைவசித்தாந்த மகா சமாஜ அறுபதாண்டு நிறைவு விழா மலர், சிதம்பரம், 1965
5. இரத்தினசபாபதி பிள்ளை, மா, சிவயோகி, திருவாசகமும் சிவராஜ யோகமும் முதல் பதிப்பு, 1973.
6. யோகசிகோபநிஷத், பழனி ஸ்ரீசாது முனிவரின் சீடர், திரிமூர்த்தி சுவாமி தமிழ் உரை. ஸ்ரீ சரஸ்வதி வளாக வெளியீடு, 1957
7. வன்மீகநாதன். கோ, மாணிக்கவாசகர் சாகித்திய அக்காதெமி. புதுதில்லி, முதல் பதிப்பு, 1983.

வ.ரா. என்றோர் அக்கினிக் குஞ்சு

— திருமதி சி. சுந்தரி எம்.ஏ.,

அகில அரங்கில் கணக்கற்றோர் வந்து வந்து செல்லு கின்றனர். உலகில் பிறந்தோர் எல்லோரையும் மானிட சமுதாயம் நினைவில் கொள்வதில்லை. செயல் திறத்தால் தங்கள் முத்திரை களை பதித்துச் செல்லும் ஒரு சிலரையே, மனித சமுதாயம் நினைவு கூர்கிறது.

கணம் கணம் தோன்றிக் கணம் கணம் மறையும்
பிணம் பல; இவரெலாம் பிறந்தார் என்பவோ!

பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர் என்பார் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை.

இவ்வாறு, என்றும் நினைவு கொள்கின்ற வகையில் உலகில் தம் முத்திரையைப் பதித்துச் சென்றவர் வ.ரா. என்றழைக்கப் படும் வ. ராமசாமி அய்யங்கார். வ.ரா. 1889-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் தஞ்சாவூர் மாவட்டம் திங்களூரில் பிறந்தார்.

''அக்கிரகாரத்தில் பிறந்த அதிசயப் பிறவி'' என்று அறிஞர் அண்ணாவால் அழைக்கப்பட்டவர் வ.ரா. அவர் சமூகச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசியவர் மட்டுமல்லர்; கலப்புத் திருமணம் செய்துகொண்டு சீர்திருத்தத்தைத் தம் வாழ்க்கையில் நடத்திக் காட்டியவரும் ஆவார்.

''வைதீக வைணவக் குடும்பத்தில் பிறந்த அவர் குல ஆசாரங்களை விடுத்தார். அதனால் அவர் குடும்பத்திலிருந்து பிரிய நேரிட்டது. சாதிக்கட்டுப்பாடுகளையும் சடங்குகளையும் அவர் ஒதுக்கிவிட்டார். அதனால் அவர்தம் சமூக மக்கள் ஒதுக்கிவிட்டனர். தன்னந் தனியாக வாழ வேண்டிய நிலைமை அவருக்கு ஏற்பட்டது.

காந்தியடிகளின் தலைமையில் மிகுந்த நம்பிக்கை கொண்ட வ.ரா. 1930-ஆம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடு

பட்டுச் சிறைத்தண்டனை பெற்றார். பின்னர் புதுச்சேரி சென்று அரவிந்தருடனும் பாரதியாருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 'சுவராஜ்யா', 'ஊழியன்' ஆகிய இதழ்களில் பணியாற்றிய வ.ரா. இலங்கை சென்று அங்கே வெளிவந்து கொண்டிருந்த 'வீரகேசரி' இதழுக்கு ஆசிரியராக இரண்டாண்டுகள் பணியாற்றினார். அதன் பின்னர் 'மணிக்கொடி' இதழில் ஆசிரியராகப் பொறுப்பேற்று, பல மறக்க முடியாத படைப்புகளை அளித்தார். எழுதுவது ஒரு செப்பிடு வித்தையன்று; மனத்தில் தோன்றுவதை அப்படியே எழுத்தில் தோற்றுவிப்பது தான் இலக்கியம் என்று அவர்தம் எழுத்துக்களில் உறுதிப்படுத்தினார். அதுவே வ.ரா. நடத்திய 'மணிக்கொடி'யின் வெற்றிக்கு அடிப்படை. இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு என்பதை வ.ரா. நன்கு அறிந்திருந்தார்.

மணிக்கொடியில் வ.ரா. ஆசிரியராக இருந்த காலத்தில் புழகு தமிழும், ஆங்கில இலக்கிய வழி உரைநடை இலக்கியமும் வளரப் பாடுபட்டார். ஆங்கிலத்தில் ஏ.ஜி. கார்ட்னர் எழுதிய 'சமுதாயத்தின் தூண்கள்' (Pillars of the society), 'இறைதூதர், போதகர், மன்னர் (Prophets, Priests and kings) போன்ற படைப்புகளைப் பின்பற்றி வ.ரா தமிழில் பல தரப்பட்ட மனிதர்களைப் பற்றி எழுதிய 'வாழ்க்கைச் சித்திரம்' வாசகரிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. வ ரா.வின் நடை வாசகரைப் பிடித்து நிறுத்தக் கூடியது. வெள்ளைக்கார நாகரிகத்தின் சுவாரஸ்யம் என்னவென்றால் மேலேயிருப்பவர்கள் எல்லோரையும் கீழ்நின்று சுமப்பவன் ஏழையாயிருப்பான். மூளை வேலை, கை வேலை என்ற பாகுபாட்டின் சேஷ்டை இது. கைவேலை செய்பவனது ஊதியத்துக்குக் கூலி என்று பெயர். மூளை வேலையின் சம்மானத்துக்குச் சம்பளம் என்று பெயர். பள்ளிக்கூட வாத்தியாரின் வருமானத்தைக் கூலிச் சம்பளம் என்று சொல்லுவதா, அல்லது சம்பளக் கூலி என்பதா! ஆழ்ந்த யோசனை தேவை' என்று வாழ்க்கைச் சித்திரத்தில் 'வாத்தியார் நாணுவையர்' என்று கட்டுரையில் குறிப்பிடுகிறார். வ.ரா.வின் நாட்டுப் பற்றும், இந்தியப் பண்பாட்டில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் மிக உறுதியானவை. கேதரின் மேயோ என்ற அமெரிக்கப் பெண்மணி இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் மிக இழிவாகக் காட்டும் வகையில் எழுதிய 'இந்தியத்தாய்' (Mother India) என்ற நூலுக்கு வ.ரா. எழுதிய, 'மாயா மேயோ அல்லது

மேயோவுக்குச் சவுக்கடி' என்ற நூலில் காணப்படும் ஆவேசமான மறுப்புரை இதற்குச் சான்றாகும். அதில், '...எனவே பரம்பரையாக வந்துள்ள இந்து நாகரிகத்தின் அடிப்படைத் தத்துவத்தை இந்துக்கள் மேயோவின் சொற்களைக் கேட்டு மாற்றிக் கொள்ள முடியாது. மேலும் இந்தியர்களின் மேற்கூறப் பட்ட பலவீனங்கள் பண்டைக் காலந்தொட்டுப் பரம்பரையாக வந்துள்ளவையாயின், இந்தியர்கள் அனைவரும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் செத்துச் சாம்பராய்ப் போயிருக்க வேண்டும்... எனவே இந்து நாகரிகத்தின் விளைவுகள் என்று கூறும் மேயோவின் சொற்கள் ஆராய்ச்சியால் தோன்றிய தீர்ப்பல்ல' என்று தக்க சான்றுகளுடன் வரிக்கு வரி மறுத்துரைக்கிறார். பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட எழுத்தாளர்களின் முதல் வரிசையில் வ.ரா.விற்கு உறுதியாக ஓர் இடம் உண்டு.

அவர் எழுதிய 'கோதைத் தீவு', 'சுந்தரி', 'விஜயம்' ஆகிய நாவல்களில் பெண் விடுதலை பற்றிய கருத்துக்களே அழுத்தமாக வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. கோதைத் தீவு' நாவல் பாரதியாரின் ஞானரதம்' எனும் கனவுலக நாவலையொட்டி எழுதப் பட்டது. மண்ணுலகில் பெண்களுக்கு ஆண்கள் இழைக்கும் கொடுமைகளுக்குத் தண்டனைபோல் கோதைத் தீவில் ஆட்சி அரசியல் எல்லாம் பெண்களே நடத்துகின்றனர்.

இந்த நாவலில் வ.ரா. ஆண்டாள் பூவுலக ஆடவரை மணக்கமாட்டேன் என்று சொல்லியது ஆண்களின் கொடுமைக்கு அஞ்சியதால்தான் என்று புதுவிளக்கம் கொடுக்கிறார். மாணிக்கக் கோதையார் என்ற தலைவியின் நிருவாகத்தில் ஆண் - பெண் சமத்துவம் நிலவுவதாகவும் பெண்களுக்குத் தீங்கிழைக்கும் ஆண்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவதாகவும் மடைத்துக் காட்டியுள்ளார். பெண்களை அவமதிக்கும் பழைய புராண நிகழ்ச்சிகள் இந்த நாவலில் மறுபரிசீலனைக்கு உள்ளாகின்றன. சுந்தரி, விஜயம் ஆகிய நாவல்களில் அந்நாளில் வழக்கத்திலிருந்த இளமைத் திருமணம் கடுமையாகச் சாடப்படுகிறது. விதவை மணம் அழுத்தமாக வற்புறுத்தப்படுகிறது. இந்நாவல்களில் பெண்கள் படும் கொடுமைகளைச் சித்திரித்த வ.ரா. இத்தகைய கொடுமையே இல்லாத நாடு இருந்தால் எப்படியிருக்கும் என்பதையே தம் கனவாகக் காட்டியுள்ளார் கோதைத் தீவு நாவலில்.

சுந்தரியில் விதவைகளைப் புறக்கணிக்கும் சமுதாயத்தைக் கிண்டலாகச் சாடுகிறார். வாசகரிடம் நேரிலேயே இவ்வாறு பேசுகிறார்.

'இவ்வளவு ஆச்சரியமான சாத்திரத்திலே எனக்கு அர்த்த மாகாத விஷயம் ஒன்றுண்டு. அதைப் படிப்பவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். விதவைதான் மனித கோஷ்டியினின்றும் விலக்காயிற்றே. அவர்களுக்கு ஏன் நாம் சோறு போடவேண்டும்? ...என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி அடுத்த மாத முதல் விதவைகளுக்குச் சோறில்லை என்று உலகத்திலேயே நோட்டீஸ் போட்டுவிடு; அப்பொழுது வீரன், வீரன் என்று சொல்லிக் கொண்டு உன் பின்னால் நான் வருகிறேன். அந்தக் கோலம் வெகு அழகாயிருக்கும். அல்லது சுருக்கமாக வேறொரு வழி சொல்லுகிறேன். பெண் பிறவியைப் படைப்பினின்றும் நீக்கி விடுவோம். அல்லது பிறக்கும் பொழுதே பெண் குழந்தைகளை யமபுரிக்கு அனுப்பி விடுவோம். இந்த ஏற்பாடு உன் மனதுக்கும் இசைந்ததாயிருக்குமென்று நினைக்கிறேன்' எவ்வளவு கூர்மை யான வார்த்தைகள் இவை? பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமையை வ.ரா. 'விஜயம்' நாவலில் மிகக் கடுமையாகச் சாடுகிறார். ஆண்கள் மீது வ.ரா விற்குக் கடுமையான கோபம் அதை விஜயம் என்ற பெண் வாயிலாக இப்படி வெளிப்படுத்து கிறார்.

இந்து குடும்ப வாழ்க்கையின் பேரில் ஆதிக்கம் செலுத்தி வரும் தர்மசாத்திரச் சட்டங்களும் சம்பிரதாயங்களும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான லாபத்தையும் சுகத்தையும் பெருமை யையும் கொடுத்து வருகின்றனவா என்று ஒரு வினாடி நேர மேனும் அவர்கள் யோசித்ததுண்டா? வீட்டு அடிமைத்தனத்தைப் பொருட்படுத்தாமலும் அதைத் தொலைக்க முயலாமலும் வெளி அடிமைத்தனத்தைப் போக்க முயலும் மனிதர்களின் நியாய புத்தியும் மனப்பான்மையும் எனக்குச் சிறிதுகூட விளங்கவில்லை' எனும் வாதம் எவ்வளவு நியாயமானது!

விதவைகள் மிகக் கேவலமாக விலங்குகளைப் போல நடத்தப்பட்டதைக் கண்டு எதிர்ப்புக்குரல் கொடுத்தவர் வ.ரா. விஜயத்தின் இளம் கைம்மை நிலையைக் கடுமையாகச் சாடு கிறார். விஜயம் கூறுகிறாள்:

'நான் தாலியறுத்த காலத்தில், எனக்கு வயது பன்னி ரண்டு. நான் இன்னும் ஸ்திரீயாகவில்லை. எந்த நாட்டிலேனும்

இந்தக் கொடுமை உண்டா? புண்ணிய பூமியான இந்த அபூர்வ தேசத்தில்தான் இந்த மாதிரி விபரீதங்கள் நடைபெறுகின்றன. விளையாட்டுக் கலியாணம் ஆயிற்று என்ற சாக்கை வைத்துக் கொண்டு, கட்டாய விதவைக் கோலம் கொண்ட பன்னிரண்டு வயதுப் பெண்ணுக்கு 'இனிப் பிறப்புக் காலம் முழுதும் இன்பக் குடும்ப வாழ்க்கை கிடையாது என்ற திட்டமான தீர்ப்பு வழங்கப் படும் நாடு நாகரிக மனிதர்கள் வாழும் நாடல்ல. கடும் புலிகள் வாழும் காடு என்றுதான் சொல்ல வேண்டும்' என்கிறாள்.

இள ம் விதவைகள் மறுமணம் புரிந்து கொள்வதால் சாத்திரத்துக்கு எந்தப் பாதகமும் விளைந்து விடாது என்பது வ.ரா.வின் நம்பிக்கை. விஜயம் நாவலில், 'ஐந்து வயதில் ஆரம் பித்து அறுபது வயது வரையில் (தப்பிதம், அதற்கு மேலுமுண்டு) இழக்க இழக்க மறுதாரம் அடைவதுதான் இந்த உலகத்துக்குத் தான் வந்த வேலை என்று நினைக்கும் தமிழன், அத்தகைய சுதந்திரம் பெண்ணுக்கும் கொடுத்துவிட்டால், கொடுத்த அடுத்த நிமிஷம் உலகத்துக்குப் பிரளயம் வந்துவிடும் என்று சொல்லுகிறானே. அதைப் பற்றிப் பேசவோ! அல்லது அதையும் யோசனையின்றி நம்புகிறார்களே அதைப் பற்றிப் பேசவோ!' என்று விதவைக்கு இழைக்கப்படும் கொடுமையைச் சாடுகிறார். நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராத சம்பிரதாயங்களைத் தூக்கி எறிந்துவிட வேண்டும். என்பது வ.ரா.வின் கொள்கை. அதே நேரத்தில் வாழ்க்கைக்குப் பயன்படும் கோட்பாடுகள் புதியனவாக இருந்தாலும், ஆங்கிலேயரிடமிருந்தாலும் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்ற கருத்துள்ளவர்.

எதிலும் புதுமை, துணிச்சல், உறுதி என்பன வ.ரா.வின் முத்திரைகள். நாட்டுப்பற்று, அந்நிய ஆதிக்க எதிர்ப்பு, உரிமை காக்கும் வீரம் ஆகியன அவர் குருதியில் ஊறிய பண்புகள்.

'வ.ரா. மேற்கொண்டது இருவகைத் தொண்டு, ஒன்று, தனி மனுதனுடைய மனச்சாட்சியை உலுக்கி, அறிவுச் சுடரைக் கொளுத்தி சிந்தனா சக்தியை வளர்த்து, போலிக் கருத்துக்களை யும் போலி ஆசாரங்களையும் அழித்து ஸமூகத்தைச் சீர் செய் வது. இரண்டாவது, பாரதி வகுத்த வழியில் தமிழை வளப்படுத்தி இளைஞர்களை இலக்கியத் தொண்டில் ஈடுபடச் செய்வது.' என்று குறிப்பிடுகிறார். கு. சீனிவாசன்.

பாரதியிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட வ.ரா. மணிக் கொடி அலுவலகத்துக்கு வருவோரையெல்லாம் பாரதியின் பாடல்

களைப் பாடச் சொல்லிக் கேட்பார். ‘மகாகவி பாரதி’ என்ற நூலையும் எழுதியுள்ளார். இப்பெரியார் 1951-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29-ஆம் நாளன்று, பகலுணவுக்குப் பிறகு, கண்ணயர்ந்தவர் இவ்வுலகைக் காண எழுந்திருக்கவேயில்லை.

தீமைகண்டு பொங்கும் குணமும் எளிமை கண்டு இரங்கும் பண்பும் இன்னும் அவருடைய படைப்புக்களில் பொங்கித் ததும்பிக் கொண்டிருப்பதை உணர முடிகிறது. வளரும் எழுத்தாளர்களுக்கு அந்நாளில் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழ்ந்த வ.ரா. இன்னும் அவருடைய இலக்கியங்களில் வாழ்ந்து கொண்டிருப்பதை வாசகர்களால் உணரமுடிகிறது. வ.ரா. எனும் அக்கினிக் குஞ்சின் ஆவேசமும் சீற்றமும் இன்றும் கூட நம் இளைய பரம்பரையினருக்குத் தேவையானதுதான்.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் மணிக்கொடி இதழ் ஆற்றிய தொண்டு இன்னும் நினைவு கூரத்தக்கது. பல புதிய எழுத்தாளர்களுக்கு எழுச்சியையும் எழுதுவதற்குரிய களத்தையும் அமைத்துக் கொடுத்தது மணிக்கொடி இதழ். இதற்கு முழுமுதற் காரணமாயிருந்தவர் வ.ரா. இன்றைய இலக்கியப் போக்கினைக் கண்ணுறும்போது, மணிக்கொடிகளும், வ.ரா.க்களும் இன்றும் எவ்வளவு தேவைப்படுகிறார்கள் என்பதை உணர முடிகிறது. வ.ரா.வின் நெஞ்சின் உரமும், நேர்மைத் திறமும், வஞ்சனையில்லாச் செயல்களும் அவரை நாம் என்றும் நினைந்து அவர் வழி நடக்கத் தூண்டுகின்றன.

வேல் காட்டும் தொன்மம்

— திருமதி. சந்திரா சுப்பிரமணியன்

பகுத்தறிவு இயக்கத்தின் தாக்கத்தால் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள தொன்மங்கள் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவையாக இருக்கலாம். ஆனால், அவை பழமையான நம்பிக்கைகளின் அடிப்படையில் எழுந்தவை; உள்ளுணர்வால் உருவானவை. அறிவியல் நோக்கில் அவற்றை மெய்ப்பிக்க இயலாது போகலாம். ஆனால் அவை சமுதாய நோக்கில் ஆழ்ந்த பொருளுடையவை. ஆகவே, தொன்மங்கள் பற்றிய ஆய்வானது, பழங்காலச் சமுதாயத்தில் எண்ண வரலாற்றினை நமக்கு எடுத்தியம்பும் வகையில் அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த நெறியில் பழந்தமிழில் சிதறிக் கிடக்கும் சேயோன் பற்றிய குறிப்புக்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

பழந்தமிழின் தனித்தன்மை :

பல்வேறு இந்திய மொழிகளில் தொடக்க இலக்கிய முயற்சிகள் எல்லாம் இராமாயணம், மகாபாரதம் முதலிய தொன்மங்களை மையமாகக் கொண்டு இலங்குகின்றன. ஆனால், தமிழில் தொடக்க இலக்கிய முயற்சிகள் அவ்வாறில்லை; மாறாக, அன்றாட வாழ்வில் நிகழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் காட்டுவனவாக அமைகின்றது. அஃதாவது, இயற்கையோடு இணைந்த தமிழர் தம் வாழ்வியல் எண்ணங்கள், நடப்புகள் முதலியவற்றை இவ்விலக்கியங்கள் எதிரொலிக்கின்றன. வாழ்வியல் சார்ந்த மூலப்படிவ எண்ண அடிப்படைகளும், அவ்வடிப்படையில் எழுந்த மூலப்படிவ வகைமாதிரிகளும் பழந்தமிழில் வேர்கொண்டுள்ளன. அதன் வளர்ச்சியாகச் சிற்சிலத் தொன்மக் குறிப்புகள் இலக்கிய விளக்க உத்தியாக அமைகின்றன.

தமிழர்தம் தனிப்பெரும் கடவுளாக விளங்கும் 'சேயோன்' வேல் ஏந்திய செம்மல் பற்றிய தொன்மங்கள், மூலப்படிவ வழிப்பட்டவை; தனிமனித உளவியல் பாங்குகள், சமுதாய அளவில் விரிந்து, காலத்துக்கு ஏற்பக் கருத்து விளக்கம் பெற்றமையைக் காட்டுபவை.

இயற்கை கடவுளாதல் :

மானுட வாழ்வு மலையில் தொடங்கிற்று என்பது அறிஞர் களின் கருத்தாகும். அதன்வழி, பழந்தமிழர் வாழ்வும் மலையில் தொடங்கிக் கடல் வரை நிண்டது.

மலை மீது வாழ்ந்த பழந்தமிழர்களை, இருளைக் கிழித்து எழுந்த ஒளிப் பிழம்பின் செம்மை கவர்ந்தது; தாம் வாழ்ந்த மலையின் செம்மையையும் ஆங்கு எழுந்த செவ்வொளியையும் போற்றினர். காலப்போக்கில், அவ்வெண்ணம் வலுப்பட்டு, இயற்கையை — செம்மையை — இறையாகப் போற்றி, 'சேஎய்' என வணங்கினர். இதனையே தொல்காப்பியரும்.

''சேயோன் மேய மைவரை உலகமும்''

என்று குறிப்பிடுகின்றனர். மேலும், 'பிறங்குமலை மீமிசைக் கடவுள்' 'வான்கோட்டுக் கடவுள்', 'குன்றக்குரவன்,, 'சோய் குன்றம்'என்ற சங்க இலக்கியக் குறிப்புக்கள் இதனை வலியுறுத்து கின்றன.

,வேங்கைப் படுசினைப் புதுப்பூ'. 'காாநறுங் கடம்பூ', 'பல்பொறி மஞ்னஞ வெல்கொடி' போன்ற குறிப்புக்கள் மலைநில மயிலையும் பூவையும் சேயோனுடன் இணைக்கின்றன.

உயர்ந்தோங்கு மலைநிலம். ஆங்குத் தோன்றும் செவ் வொளி, மலைநிலப் பூ, புள் முதலியவற்றை இணைத்து எழுந்த, 'சேயோன்' பற்றிய குறிப்புக்கள் பழந்தமிழரது மூலப்படிவ எண்ணத்தைத் (premordial thought) தெளிவுறுத்துகின்றன; அதனோடு, கடவுளை இயற்கையாகக் கண்ட தமிழர்தம் நெறி யினையும் புலப்படுத்துகின்றன.

வேல் < வெல் > வென்றி = வேலன் :

தொடக்கத்தில் இயற்கையை இறையாகக் கொண்ட பழந் தமிழர்கள் மானுட வெற்றியையும் இறையாகப் போற்றத் தலைப் பட்டனர்; இயற்கையோடு உறையும் வாழ்வில், களிறு பெயர்தல், காளையை அடக்கல், புலியை வீழ்த்துதல் முதலிய வீரமும், முயற்சியும் உடைய தலைவன் போற்றப்பட்டான். பகையையும் விலங்கை அழிக்கப் பயன்பட்ட வேல் போற்றப்பட்டது.

குறிஞ்சித் தலைவன் பெற்ற வெற்றியும் ஆயுதமும் சேயோ னுடன் இணைக்கப்பட்டன. குறிஞ்சித் தலைவனின் ஆளுமைப்

பண்பு 'ஆண்டகை விறல்வேள்' என வேல் ஏந்திய வேளின் (முருகன்) செயலாகவே நோக்கப்பட்டது; காதல் சிறப்பிலும் குறிஞ்சி நிலத் தலைவன், முருகனோடு ஒப்பு நோக்கப்பட்டான்... திறனாய்வு உலகில் சிறப்பிடம் பெறும் கனடாநாட்டு அறிஞர் நார்த்ராப் பிரையின் தொன்மத் தலைவனும் படிப்போரின் கற்பனைகளை நிறைவேற்றும் வீரத்தலைவனாக இருத்தல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இங்கு வேல் என்பது மானுட வாழ்வின் முயற்சி, வெற்றி, காதற்சிறப்பு ஆகியவற்றினைக் குறிப்பிட உதவும் படிமத் தொடர் பின் பதிலீடாக விளங்குகின்றது.

வழிபாட்டு முறைகள் :

வேல் ஏத்திய வகைமாதிரியாக(pattern) உள்ள வேலனே, பழந்தமிழர் தம் அக வாழ்விற்கும் புறவாழ்விற்கும் தலைவனாக விளங்குகின்றான்,

களவுக் காலத்தில் தலைவனின் வரவு நீட்டித்தமையால் துயருறும் தலைவினின் உடல்நலக் குறைவிற்கு வெறியாட்டு அயர்தல் வழக்கமாக உள்ளது.

அச்சம், கொடூரம் இவற்றின் உருவமாக விளங்கும் சூரும், சூரர மகளிரும் சேயோனால் வெற்றி கொள்ளப்பட்டன; சூர் × சேயோன்; சூரர மகளிர் × சேயோன் என்ற முரண்பாடே பின்னர் எழுந்த கந்தபுராணக் கதைக்கும் உதவியது போலும்!

மேலும் மழை வளம் நல்கும் மாண்புடையனவாகவும் செவ்வேள் போற்றப்பட்டமையை அகநானூற்றுப் பாடல் காட்டுகின்றது, கள்ளும் கண்ணியும் கையுறையாகக் கொண்டு நால் செவிக்கிடாஅய் இட்டு வழுத்திய மருதநில வழிபாடு இதனை உறுதிப்படுத்தும்.

வேலேந்தும் சேயோனும் பிற போர்க் கடவுளரும் :

அழகுக்கும் இளமைக்கும் உரிய சேயோனை, வேல் ஏந்திய வீரனாகக் கொண்டு ஆற்றலுக்கும் சிற்றத்திற்கும் வெற்றிக்கும் உரியவனாகப் பழந்தமிழர் கொண்டனர்; அதனோடு மழை வளம் நல்கும் வரந்தரு தெய்வமாகவும் போற்றினர் என்பதும் இதுகாறும் விளக்கியமையால் புலப்படுகின்றது,

தமிழின் சேயோன் போன்றே வடமொழியிலும் கிரேக்க இலத்தீன் மொழிகளிலும் போர்க் கடவுளரே, மழைதரு கடவுளராக இருந்தனர் என்ற குறிப்பு இன்றியமையாதது.

வடமொழித் தொன்மத்தில், தேவர்களுக்குத் தலைவனாக -ஆற்றல் மிக்க தளபதியாக விளங்கிய இந்திரனே மழை தரு கடவுளாக விளங்கினான்.

அதுபோன்றே, கிரேக்க மொழியில் மார்சும் இலத்தீன் மொழியில் அரிசும் போர்க்கடவுளாகவும், மழைதரு தெய்வமாக வும் விளங்குகின்றனர். முருகன் வள்ளியை மணந்தது போன்று கிரேக்கக் கடவுளான மார்சு வீனசையும் அரிசு அப்ரோடைட் டையும் மணக்கின்ற கதை காதற் சிறப்பு மிக்கதாகும்.

வேலன்>பொதுமைக் குறியீடு :

தமிழர்தம் தனிப்பெரும் கடவுளாக விளங்கிய வேலன், வடமொழிக் கலப்பால், அலைவாய்ச் சேரலும் ஏகத்து உறை தலும் ஆகிய இடத்தினைப் பெறுகின்றான். மழைநலம் வேண்டிப் பழங்குடியினர் போற்றிய வேலனை புள்மிசைக் கொடியோனும், புங்கவம் ஊர்வோனும், மருந்திறை இருவரும் அமரரும் அவுணரும் தொழுது ஏத்தும் பான்மையைப் பரிபாடல் காட்டுகிறது.

திருமுருகாற்றுப்படையில், பழங்காலத் தமிழர்தம் வெறி யாட்டு வழிபாட்டோடு இணைந்துவிட்ட ஆரிய வழிபாட்டு முறையும் காணப்படுகிறது. ஸ்கந்தத்தில் வரும் கதைக்கு நாயகனையும் வேலன் வெறியாடும் களத்தின் நாயகனையும் ஒருங்கிணைக்கும் முயற்சியாகவே திருமுருகாற்றுப்படை விள்க்க முறுகின்றது. இவ்வாறு வேல் ஏந்திய வீரன், வேதம் போற்றிய இந்திரனை மீட்கும் பொறுப்பேற்று இந்தியா முழுவதற்குமான பொதுமைக் குறியீட்டினைப் பெறுகின்றான்.

வேலின் வெற்றி

தொடக்கத்தில் பழந்தமிழில் உத்தியாக இடம்பெற்ற இத் தொன்மக் குறிப்புக்கள் பின்னர் பண்பாட்டுக் கலப்பால் செறி வான மாற்றங்களைப் பெற்றன. காலப்போக்கில் இச்சேயோன் தொன்மம் வளர்ச்சியுற்று, 'புராணம்' என்ற தனித்த இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றதைக் கச்சியப்பரின் கந்தபுராணம் காட்டும்.

கச்சியப்பர் கந்தபுராணத்தில் வேலினை அறத்தின் வடிவ மாகப் படைக்கின்றார். இவ்வுலகில் மறச்செயல்கள் மிகும்போது

அறமே வெற்றிபெறும் என்ற இந்தியச் சிந்தனைக்கு வேலினைப் படிமமாக்குகின்றார்.

> ''பொருளின் நீர்மையாற் புன்கலன் மாற்றலிற் புவிமேல்
> இருளின் நீர்மையாய்த் தோன்றினோன் அற்புதமெய்தி
> மருளின் நீர்மையால் நின்றது..................................''

எனச் சூரபத்மனை இருளின் - அறியாமையின் வடிவமாகவும் அவனது போர் முறையினை மாயப் போராகவும் வருணிக்கின்றார். மரமாக நின்ற சூரனைப் பிளக்கச் செல்லும் வேலானது ஆயிரங்கோடி ஞாயிறு போல் ஒளி வீசிற்று; தீச்சுடர்களாய் உமிழ்ந்தது என்ற வருணனைகள், வேலினை ஞானத்தின் வடிவாக – அறத்தின் உருவமாகக் காட்டுகின்றன. சூரனை அழித்த முருகப் பெருமானின் வெற்றியை - வேலின் வெற்றியை அறத்தின் வெற்றியாகப் போற்றுகின்றார்.

வேல் பதிவீடு :

தொடக்கத்தில் பழந்தமிழில் இயற்கையோடு இணைந்த செந்நிறச் செம்மலாகச் சேயோன் காட்சி அளிக்கின்றான், அதன் பின்னரே, 'வேல்' ஏந்திய வீரனாக - வீரநிலைக் காலத் தலைவனின் வகைமாதிரியாக உருவெடுக்கின்றான். இவ்வாறு பழந்தமிழ்ச் சமுதாயத்தின் எண்ண வரலாற்றினை - பண்பாட்டு வளர்ச்சியை வேலிற்கான பதிவீடுகள் விளக்குகின்றன. அவை:

- குறிஞ்சிக் கிழவோனின் காதல், வீரச்சிறப்புக்களையும் போர் வெற்றியையும் விளக்குகின்றது.
- பின்னர் மழைதரு தெய்வமாக உயர்ந்தமையைப் புலப்படுத்துகின்றது.
- வடமொழிக் கலப்பால் இந்திரனை மீட்கும் பொறுப்பேற்று இந்தியா முழுவதற்குமான பொதுத்தன்மை பெற்றமை தெளிவாகின்றது.
- இவற்றின் தொடர்ச்சியாய் 'அறத்தின் வெற்றியை உறுதி செய்கின்றது.

இவ்வாறு ''வேல் காட்டும் தொன்மம்'' பழந்தமிழர்தம் எண்ணங்களின் வரலாற்றினை நமக்குப் புலப்படுத்துகின்றது.

அறிவியல் தமிழ்

இருபதாம் நூற்றாண்டின் முதல் தமிழ் நூல்

— பேரறிஞர் தொ. பரமசிவன்

அறிவியல் தமிழ் இன்று பரவலாகப் பேசப்படும் துறைகளில் ஒன்று. தாய்மொழியில் அறிவியல் கற்பிக்கப்படாத போது சமூகத்தின் அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது, சமூக நீதி மறுக்கப்படுகிறது, என்ற எண்ணம் அறிஞர்களிடையே வளர்ந்து வரும் காலம் இது. அறிவியல் தமிழாக்க முயற்சிகளில் கலைக்கதிர் இதழ், தினமணி நாளிதழ், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய நிறுவனங்கள் முனைந்து நிற்கின்றன. பெ.நா. அப்புசாமி இத்துறையில் தனியராக 50 ஆண்டுக்காலம் பணி செய்தார். இன்று வா.செ. குழந்தைசாமி போன்ற அறிவியல் அறிஞர்களும், டாக்டர் இராம. சுந்தரம்,ராதாசெல்லப்பன், டாக்டர் நரேந்திரன் போன்ற பேராசிரியர்களும் இத்துறையில் உழைத்து வருகின்றனர். தமிழகத்தின் சில கல்லூரிகளில் இன்று அறிவியல் தமிழ், பாடத்தாள்களில் ஒன்றாகவும் வைக்கப்பட்டுள்ளது. ஆயினும், இந்த எல்லையைத் தமிழர்கள் தொடுவதற்குக்கூட 150 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன என்பதுதான் வரலாற்று உண்மை. 1832-ல் நெல்லை மாவட்ட சி.எஸ்.ஐ. திருச்சபைப் பேராயர் ரேனியசு (Rhenius) அடிகளார் எழுதிய 'பூமி சாஸ்திரம்' என்கிற நூலோடு அறிவியல் தமிழின் வரலாறு தொடங்குகிறது. 1850க்கும் 1880க்கும் இடையே மருத்துவர் சாமுவேல் கிரீன் என்ற அமெரிக்கர் மருத்துவக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்று மொழி ஆக வேண்டும் என்ற நோக்கத்தோடு மருத்துவ நூல்கள் சிலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து ஆக்கினார். உடற்கூறு இயல், காலரா ஒழிப்பு, மகப்பேறு மருத்துவம், வேதியல் ஆகிய துறைகளில் அவரது தன்னாக்க — மொழியாக்க நூல் முயற்சிகள் குறிப்பிடத் தகுந்தவை ''பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'' என்ற பாரதியின் கவிதை பிறப்பதற்கு முன் பிறந்த நூல்கள் இவை. இன்றைக்கு 142 ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மருத்துவத்தை 33 பேருக்குத்

தமிழில் கற்பித்து, டாக்டர் கிரீன் புரிந்த அறிவியல் தமிழ்ச் சாதனையை, நன்றியுடன் குறிப்பிடுகிறார் ராதாசெல்லப்பன்.

இவ்வகையான முன்முயற்சிகளும், தமிழ்ப் பத்திரிகைகளின் வளர்ச்சியும் உள்நாட்டு அறிஞர்களையும் 1880க்குப் பின் அறிவியல் தமிழில் எழுதச் செய்தன. அந்த வகை முயற்சியாளர்களில் சிலருடைய பெயர்கள் மட்டுமே தாய்நாட்டவரால் அறியப் பட்டுள்ளன. அறிவியல் தமிழ் முயற்சியில் அறியப்படாத பெயர்களில் ஒன்று சேலம் பகடால நரசிம்மலு நாயுடு.

'சேலம் பகடால நரசிம்மலு நாயுடு' தமிழில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு மட்டுமே தெரிந்த பெயர். அதுவும் காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை முதன்முதலில் எழுதியவர் என்கிற அளவிலேதான். சேலத்தைச் சேர்ந்த இவர் 1881-இல் கோயம்புத்தூருக்கு குடிபெயர்ந்திருக்கிறார். அங்கிருந்து கொண்டு ஆஸ்திக மத சித்தாந்தம், ஆரியர் சத்திய வேதம், காசி யாத்திரை ஆகிய நூல்களை எழுதி இருக்கிறார். கோவையிலிருந்தே 'கலாநிதி' என்ற பத்திரிக்கையையும் சில காலம் நடத்தி இருக்கிறார்.

1900வது ஆண்டு சனவரி மாதம் 1-ம் தேதி இவர் எழுதி வெளியிட்ட நூலின் பெயர் 'வியவசாயம் அல்லது கிருஷிசாஸ்திரசாரசங்கிரகம்'. 20-ம் நூற்றாண்டின் முதல் நாளில் பழந்தமிழ் மொழிக்குப் புதியதாய்ப் பொழுது விடிந்தது. அறிவியல் தமிழன் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய நூல் இது. ஐந்து பக்கங்களில் வாழ்த்து, ஏழு பக்கங்களில் முகவுரை, நூன்முகம் 26 பக்கம். 138 பக்கங்களில் நூல். இந்த அரிய தமிழ் நூலுக்கு அக்காலத்தில் சென்னையிலிருந்த விவசாய அறிஞர் டாக்டர் எஸ். பழனியாண்டி என்பவர், ஆங்கிலத்தில் ஒரு பக்க அளவில் வாழ்த்துரை வழங்கிருக்கிறார். 138 பக்கங்களை உடைய இந்த நூலில் 10 அத்தியாயங்கள் உள்ளன.

1. மண்ணின் உற்பத்தி, வகுப்புகள் குணங்கள்
2. மண்ணில் இருக்கவேண்டிய எருவின் விவரங்கள்
3. விவசாயத்துக்கு இன்றியமையாத தண்ணீரின் குணங்கள்
4. பூமியைப் பண்படுத்தும் வகை
5. பண்படுத்துவதற்கேற்ற கருவிகள்

6. பண்படுத்துவதற்கேற்ற கால்நடைகள்
7. அக்கால்நடைகளைப் பாதுகாக்கும் முறைகள்.
8. நமது இராஜதானியில் விளையும் பயிர் வகைகள்.
9. அவைகளை விளைவிக்கும் காலம்.
10. அவைகளை விளைவிப்பைப் பற்றிப் பெரியோர் சொல்லி யிருக்கும் பழமொழிகள்.

இத்துடன் பயிர்த்தொழில் செய்வோர், நிலம், பயிர், இவை குறித்த புள்ளி விவரங்களோடு கூடிய அட்டவணைகள். ஆராய்ச்சி நெறிமுறைகள் (Methodology) குறித்த அரட்டல் களோ, அலட்டல்களோ இல்லாத காலத்தில் (1900) இந்நூல் ஆராய்ச்சி நெறிமுறைகளோடு கூடிய அறிவியல் நூலாக எழுதப் பட்டது.

கோவை பாஷ்யகாரலு நாயுடு என்பவரும் அக்காலத்தில் வேளாண்மை துறையில் பணிபுரிந்த ராஜகோபால நாயுடு என்பவரும் தனது நூல் முயற்சிக்கு உதவியர்கள் என்று குறிப் பிடும் நாயுடு அப்போது கோவை மாவட்ட ஆட்சித் தலை வராக இருந்த நிகில்சன் துரையே தன்னை 'பட்டிக்காட்டுத் தமிழில்' இந்த நூலை எழுதும்படி வழிகாட்டியதாக நன்றியுடன் குறிப்பிடுகிறார்.

1900 வரையான சென்னை அரசாங்கத்தின் வேளாண் துறையினுடைய (30) வெளியீடுகளையும், அமெரிக்க அரசாங் கத்தின் 60 வெளியீடுகளையும், இவை தவிர உட்ரோப் (Woodrofe) ராபின்சன் (Robinson) ஆகியோர் ஆங்கிலத்தில் அக்காலத்தில் எழுதிய விவசாய நூல்களையும் இந்நூலாசிரியர் படித்து எடுத்து ஆண்டிருக்கிறார். பிற நாடுகளில் வாழ் இந்தியர் கள் அங்குள்ள வேளாண் அறிவியல் குறித்து எழுதிய கடிதங்களை மேற்கோள் காட்டியிருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாகத் தானே கோவைக்கு அருகில் 3500 ரூபாய் கொடுத்து நிலம் வாங்கி அதில் பல சோதனைகளை நிகழ்த்திப் பார்த்து இருக்கிறார். இக்காலத்துப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிக் கான நேர்மையையும், உழைப்பையும் நாயுடுவின் புத்தகத் தைப் படித்துப்பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

நாயுடுவின் கலைச் சொல்லாக்க முயற்சிகளும் அதற்கு அவர் வகுத்துக் கொண்ட நெறிமுறைகளும்தான் இன்றளவும்

இந்நூலின் உயிர்ப்புக்கும் காரணமாக அமைகின்றன. நாயுடுவுக்கு முந்திய இத்துறையாளர்களில் சாமுவேல் கிரீன், கலைச்சொல்லாக்க முயற்சிகளைச் செய்தார் என்றும், (.) Materia Medica and Pharmacy (ii) Midwifery (iii) Discases of women and Children (iv) Medical Jurispudence

ஆகிய தலைப்புகளில் அவர் வெளியிட்டார் என்றும் ராதா செல்லப்பன் கூறுகின்றார். நாயுடு இதனைக் குறித்து ஏதும் அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. பின்னர் 1985ல் தான், கலைச்சொல்லாக்க நெறிமுறைகளை விரிவாகப் பேசும் டாக்டர் ராதா செல்லப்பனின் 'கலைச்சொல்லாக்கம்' டாக்டர் வா.செ. குழந்தைசாமியின் 'அறிவியல் தமிழ்' ஆகிய நூல்கள் வெளிவருகின்றன. இந்த வரலாற்றுப் பின்னணியை மனத்திலே கொண்டு நாயுடுவின் முயற்சியை மதிப்பிட வேண்டும்.

ஆங்கில மொழியில் அமைந்த அறிவியல் கலைச்சொற்களை தமிழாக்குவதற்கு நாயுடு எடுத்துக்கொண்ட முயற்சியை கீழ்க்காணுமாறு பகுத்துப் பார்க்கலாம்.

1. தமிழில் வழக்கு மரபிலுள்ள சொல்லைப் பயன்படுத்துதல்

Loamy soil — பசலைமண்
Cotton soil — கரிசல் பூமி
Gravel — சரளை மண்
Piderpest — கோமாரி, அலரி, காற்று நோவு
Mabgnent sore throat — குறுவை நோவு

2. வழக்கு மரபிலுள்ள இரண்டு சொற்களைக் கூட்டி ஒரு புதுச் சொல்லாக்குதல்

Black alluivial soil — கரிசல் படுகை நிலம்
Black Peaty soil — கருங்கற்றை நிலம்

3. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை பொருள் வேறுபடுத்திப் பயன்படுத்துதல்

Manure — எரு
Fertiliser — உரம்

4. தானே புதிய சொற்களை ஆக்குதல்

Hydrogen — ஜலமூலம், ஜலவாயு, ஜலதம்
Nitrogen — நிர்ஜீவமூலம் அல்லது முசரகம்

Carbcn — கரிஅணு, கரிமூலம் இங்காலம்
Phosphorus — பிரகாசிதம் அல்லது காடிகாரமூலம்
Chloiine — இவ்வணமூலம் அல்லது ஹரிதம்
Potash — காரமூலம் அல்லது சாம்பற்காரம் அல்லது சர்ஜிதம்

5. ஆங்கிலச் சொல்லை தமிழ்மைப்படுத்துதல்

Magnenese — மாங்கனிசை அல்லது காந்தப்போலி
Kentaky Blue grass — கெண்டகி நீலப்புல்

6. ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்துதல்

Iodine — ஐயோடைன்
Flworine — பிளோரைன்

நாயுடுவின் நூலில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மற்றொரு கூறு அந்நூலின் எளிமையான நடையாகும்; பெறுப வனை மனத்தில் கொண்டு கருத்துக்கு முதலிடம் பெறுகிறார்; அதனால் எளிய சொல்லாட்சியும் சிறிய தொடர்களும் இயல் பாகப் பிறக்கின்றன. ஒப்பனையில்லாத மொழிநடை நூலாசிரி யரின் நோக்கத்தை நிறைவேற்றி விடுகின்றது.

(எ.டு) மாங்கனிசை அல்லது காந்தப்போலி

இது மண்ணிலும் சாம்பலிலும் இருக்கிறது. இதன் திட்பம் பிராணவாயு, குளோரைன் என்னும் இரண்டு வாயுக்களை உண்டாக்குவதற்கு உபயோகப்படுகிறது. இது சுத்தமாகவிருந் தால் எஃகைப்போல வெளுத்திருக்கும். காற்றிலிருக்கும் ஜீவ மூலத்தை இது நிதானமாகக் கிரஹித்துக் கொள்ளும். இதற்கு ஜலத்தைப் பிரிக்கும் தன்மையுண்டு''

இன்றைய அறிவியல் அறிஞர்களின் சிந்தனைக்குரிய ஒரு பெரிய பணியினையும் நாயுடு செய்திருக்கிறார். வேளாண் அறிவியல் போன்ற உலகின் பழைய துறைகளில் மரபு வழியாகப் பெற்ற தொழில்நுட்ப அறிவினையும் நாம் பயன்படுத்த வேண்டும் என்பது அவர் கருத்து. தோராய விஞ்ஞானம் (Empirical Science) எனப்படும் உயிரியல், பயிரியல் துறைகளில் இந்த முயற்சிகளை நம் நாட்டில் அறிவியல் கற்பிக்கும் பேராசிரியர்கள் இன்றுவரை மதிப்பது இல்லை. ஏனென்றால்

நாயுடு எழுத்தாளராக மட்டுமல்லாமல் விவசாயியாகவும் தனது நிலத்தில் பல சோதனைகளைச் செய்து பார்த்திருக்கிறார். அதிக எழுத்தறிவு பெறாத சமூகத்தின் தொழில் நுட்ப அறிவு, அந்தச் சமூகத்தின் வழக்குத் தொடர்கள், பாடல்கள், பழமொழிகள் இவற்றிலேதான் பொதிந்து கிடைக்கும். அவ்வகையில் நாயுடு வேளாண்மை தொடர்பான 680 பழமொழிகளையும் சொல்லடைகளையும் தன் நூலின் இறுதி அத்தியாயமாகத் தொகுத்துத் தந்திருக்கிறார். இப்பழமொழிகளும் தொழிலின் பெருமை, தொழிலாளியின் உழைப்பு, நிலம், வேலியடையப்பு, பருவகாலம், மழை, உரம், நீர்பாய்சல், களையெடுப்பு, விதை, பயிர், பயிர் விதைகள் (எள், பருத்தி, கரும்பு, வாழை, தென்னை) கால்நடைகள் என்ற வகையில் வகுத்துத் தரப்பட்டுள்ளன. இது மரபு வழித் தொழில் நுட்பத்திற்கும் புதியவழித் தொழில் நுட்பத்திற்கும் புதிய விஞ்ஞான அறிவுக்குமான இடைவெளியை பாலம் கட்டி நிரப்பும் உன்னதமான முயற்சியாகும்.

இன்றைய அறிவியல் தமிழ் முயற்சியாளர்களால் நினைக்கப்பட வேண்டிய நூல் சேலம் பகடால நரசிம்மலு நாயுடு அவர்களின் 'வியவசாயம் அல்லது கிருஷிசாஸ்திரசாரசங்கிரகம்.

"மொழிபெயர்ப்பு உத்திகள்"

— செ. இராசேசுவரி

தாகூருக்குப் பின் ஞானத்தைத் தெளிவாக விளக்கிய கீழை நாட்டுத் தத்துவ இயலாளர் கலீல் கிப்ரான் ஆவார். இவர் இலெபனான் நாட்டினர். இவருடைய தெளிந்த ஞான நூலான 'கண்ணீரும் புன்னகையும்' (Tears and laughter) தமிழில் அ.மா. சகதீசன் என்பவரால் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 'பக்தியின் மொழி தமிழ்' என்று பாராட்டுப் பெற்ற தமிழ் மொழியில் கலீல் கிப்ரானின் ஞானத் தத்துவங்களைப் பெயர்த்தளிக்க பல உத்திமுறைகளை மொழி பெயர்ப்பாளர் கையாண்டுள்ளார். இவ் உத்திகள் தொடர்பியல் அணுகுமுறை யைச் (Communicative approach) சார்ந்தன. ஒருவர் மற்றொரு வரிடம் ஒரு கருத்தைத் தெரிவிக்கும்போது அக்கருத்துத் தெளி வாகப் புரிவதற்குச் சில உத்திகளைக் கையாள்வது மரபு. அங்ஙனமாக அ.மா. சகதீசனும் பின்வரும் உத்திகளைக் கையாண்டுள்ளார்:

1. அடைமொழிகள் சேர்த்தல்
   (Addition of adjectival and adverbial forms)
2. விளக்கிக் கூறுதல் (Explanation)
3. திரும்பக் கூறுதல்
4. (Repeating the shades of meaning through another equivalent successively).

இவற்றை ஒவ்வொன்றாகச் சான்றுகளுடன் விளக்குவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சேர்த்தலும் விலக்கலும் மொழிபெயர்ப்பில் அறனில் செய்கைகளாகக் கருதப்பெறுவன. எனினும், மூலநூல் கருத்தில் மாற்றம் ஏற்படுத்தாமல், அக் கருத்தினைப் புலப்படுத்தும் சொல் வடிவங்களில் சேர்த்தலும் விளக்கமும் கொள்வதில் தடையேதும் இல்லை.

1. அடைமொழிகள் சேர்த்தல் :

பெயர்ச் சொற்களை மொழிபெயர்க்கும்போது அவற்றிற் குரிய நிகரன்கள் எளிதில் கிடைத்துவிடும் வாய்ப்பு ஏற்படு

மானால், அவ்வேளையில் மொழிபெயர்ப்பாசிரியர் மூலநூலின் கருத்தினை இம்மொழிபெயர்ப்பு நிகரன் சரியாகப் புலப்படுத்துமா என ஐயுறுகிறார், அல்லது தடுமாறுகிறார். இத் தடுமாற்றத்தின் விளைவாக மொழிபெயர்ப்புச் சொல்லுக்கு ஓர் அடைமொழியைச் சேர்க்கிறார்; இவ் அடைமொழி மூலநூற் கருத்தினை அழுத்தமாகவும் தெளிவாகவும் புலப்படுத்த உதவுவதாகக் கருதுகிறார். மொழிபெயர்ப்பில் அடைமொழிப் பயன்பாட்டிற்கான அடிப்படைக் காரணமாக நாம் இதனைக் கொள்ளலாம். இப் பயன்பாட்டில் மூலநூல் வாசகர் பெற்ற மன உணர்வை மொழிபெயர்ப்பு வாசகரும் பெற உதவுகிறது என்பது மொழிபெயர்ப்பாசிரியரின் நம்பிக்கை.

'I am the lover's **gift**' — நான் காதலர்களின் அன்புப் பரிசு
'I am the wedding **wreath**' — மணமக்களின் மங்கல மாலை
'I am a part of **joy**' — நானே இன்பத்தின் பெரும் பங்கு
'But I look up high to — நான் பேரொளியைக் காணத்தான்
see only the **light** விண்ணை அண்ணாந்து நோக்குவேன்
—song of the flowes — பூவோ பூ. ப. 72.

2. விளக்கிக் கூறுதல்:

மொழிபெயர்ப்பாசிரியர் தமிழ் வாசகரின் புரிதிறனை மனத்திற்கொண்டு விளக்கிக் கூறுதல் உத்திமுறையைக் கையாண்டுள்ளார். அடைமொழிப் பயன்பாட்டிற்கு அடுத்த நிலையாக இவ் விளக்கியுரைக்கும் உத்தி முறை அமைகிறது. அடைமொழியால் மூலநூற் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்க இயலா நிலையில் கூடுதல் விளக்கம் அளிக்க வேண்டியதன் கட்டாயத்தை மொழி பெயர்ப்பாசிரியர் உணர்கிறார். எனவே மூலநூற் சொல்லைவிளக்கமாக மொழிபெயர்த்துள்ளார். சான்றாக,

'I suffer, I have
exhausted my Life following you.'
—(Have mercy on me, my soul)

என்ற வரியில் இடம்பெறும் 'exhausted' என்ற சொல்லை,

"தேய்ந்து, நைந்து ,அழுகும் உடலைப் பார்"
—(ஆவித்துணையே கருணை காட்டு, ப. 92)

என்று மொழிபெயர்த்துள்ளார். 'தேய்ந்து, நைந்து, அழுகும்

உடல்' என்ற விளக்கம் பல அடைகளைக் கொண்டு அமைந்துள்ளது.

'விளக்கிக் கூறுதல்' என்னும் இவ்உத்தி, மூலநூலில் காணப்படும் சொல்லையும் பொருளையும் மொழிபெயர்த்த பின்னும், அம்மொழிபெயர்ப்புக்கும் மேலாக வேறு சில சொற்களையும் அமைத்துள்ளது. சான்றாக,

'look upon me, my soul'
— (Have mercy on me, my soul)

என்பனை,

'என் ஆத்மாவே! உற்றுநோக்கு யோசித்துப் பார்'
—(ஆவித்துணையே, கருணை காட்டு, ப. 91)

என்று மொழிபெயர்த்திருப்பதில் 'யோசித்துப் பார்' என்ற தொடர் விளக்கத் தொடராகவே அமைந்துள்ளது. மூல நூலில் இதற்குரிய சொல் காணப்பெறவில்லை.

'This, my soul, is agonizing torture'
— (Have mercy on me, My Soul)

என்ற ஆங்கிலத் தொடரைத் தமிழில் மொழிபெயர்ப்பாசிரியர்,

'ஆன்மாவே! இது பொறுக்க முடியாத வேதனை!
பெரும் சித்திரவதை! உயிர்க்கொலை' (ப.91)

என விளக்கியுள்ளார். 'வேதனைப்படுத்தும் சித்திரவதை' என்பது மூலத்தின் சரியான மொழிபெயர்ப்பு. ஆனால் இத்தொடரைப் பிரித்து 'வேதனை'யையும் 'சித்திரவதை'யையும் தனித்தனியாக அடைகளோடு விளக்கியுள்ளார். இவையும் போதாவென்று 'உயிர்க்கொலை' என்பதனையும் சேர்த்துள்ளார். இவ்விளக்கத்தில் மொழிபெயர்ப்பாசிரியர் தம் கருத்து எதனையும் புதிதாகச் சேர்க்கவில்லை. மூலநூற் கருத்தை விளக்கமாக மொழிபெயர்த்துள்ளார்.

விளக்கமாக உரைக்கும் உத்தியைப் பயன்படுத்தும்போது அ.மா. சகதீசன் குறிப்பிடத்தக்க ஒரு வழிமுறையைப் பின்பற்றுகிறார். ஒரு பாடற் பகுதியினை மொழிபெயர்க்கும்போது அப்பகுதி உணர்த்தும் கருத்தைச் செவ்வனே புலப்படுத்த விரும்பி அக்கருத்தின் சாரத்தை அப்பகுதியின் முதலிலாவது இறுதியிலா

வது ஓரிரு வரிகளில் எடுத்துரைக்கிறார். இத்தகைய, சாரம் உணர்த்தும் பாங்கு மூலநூல் கருத்தைக் காட்டிலும் மிகையாக ஒரு கருத்தை உரைப்பதாகாது. மாறாக அக்கருத்தினை முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ள இவ்வழிமுறை உதவுகிறது எனலாம். ஏனெனில் முதலிலோ இறுதியிலோ அமையும் இவ்வரிகள் மூலநூலாசிரியர் கருத்துக்கு முரணானவற்றைக் குறிக்கவில்லை; மொழிபெயர்ப்பாசிரியரின் சொந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

சான்று :

எனக்கு ஓய்வில்லை, ஒழிவில்லை, அமைதியில்லை!
கடற்கன்னிகளைச் சுற்றி நடனமாடுவேன்!
அவர்கள் கடலாழத்திலிருந்து வெளிப்படுவர்!

—அலைஇசை. ப. 103.

'Many times have I danced around mermaids
As they rose from the depths and...'

— Song of the Wave

இக் கவிதையின் தொடக்கப் பகுதி தமிழில் பின் வருமாறு அமைந்துள்ளது. இப்பகுதியின் மூன்றாம்வரி முதலிரு வரிகளையும் நான்காம் வரியையும் விளக்குகிறது.

''பலமிக்க கரைதான் என் காதலன்!
நான் அவன் இனிய இதயம்!
நானும் கரையும் காதலர்கள்!
நாங்கள் காதலால் இணைக்கப்பட்டோம்!''

—அலை இசை ப. 103.

''The strong shore is my beloved
And, I am his sweetheart,
We are atleast united by love, and''

— Song of the wave

'பூவோ பூ' (Song of the Flower) என்ற கவிதையில் நிறைவுப் பகுதி ஆங்கிலத்தில்,

''This is the wisdom
which man must learn

என அமைந்துள்ளது. தமிழில் இதே பகுதி பின் வருமாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது:

'மானிடனே நான் புகட்டும் இதோ,
எப்போதும் தலை நிமிர்ந்து நில் நீ!
தலை தாழ்த்தி என்றுமே கீழ் நோக்காதே!''
'பூவோ' பூ —ப, 72

முதல் வரியுடன் மொழிபெயர்ப்பு நிறைவு பெற்றுவிட்டது. அடுத்த இரு வரிகளும் இப்பகுதிக்கு முன்னதாக அமைந்திருந்த பின்வரும் வரிகளின் விளக்கமாக இக்கவிதையின் அடிநிலைக் கருத்தாக அமைந்துள்ளன.

''நான் பேரொளியைக் காணத்தான்
விண்ணை அண்ணாந்து நோக்குவேன்;
நான் என் நிழல் காண என்றுமே
தலை தாழ்த்திக் குனிவதே இல்லை''
— (பூவோ பூ, ப. 72)

இம்முறையில் மொழிபெயர்ப்பாசிரியர் சில பகுதிகளை, மொழிபெயர்த்ததோடு மட்டும் அமையாமல், மேலும் சில விளக்கங்களை முதலிலும் இறுதியிலும் அவ்வப் பகுதிகளிலும் கூட அமைந்துள்ளார்.

3. திரும்பக் கூறுதல் :

மக்கள் தொடர்பியலில், திரும்பத் திரும்பக் கூறுவதாய் கூறுவோரின் கருத்து கேட்போரின் மனத்துள் ஆழப்பதியும் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட மெய்ம்மையாகும். நாட்டுப்புறப் பாடல்களிலும், பழந்தமிழ்த் தன்றுணர்ச்சிப் பாடல்களிலும் இவ்வுத்தி பயன்பட்டிருப்பதை அறியலாம். சி. எம். பௌராவின் 'வீரநிலைப் பாடல்கள்' எனும் நூல் இதனைச் சான்றுகளுடன் விளக்கியுள்ளது. இவ் உத்தியை மொழிபெயர்ப்பில் அ. மா. சகதீசன் புகுத்தியிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இவர் ஒரே சொல்லுக்கு இரண்டு நிகரன்களை அடுத்தடுத்து அமைத்துள்ளார். இவ்வாறு திரும்பக் கூறுவதால் பொருள் அழுத்தம் கிடைக்க வாய்ப்புண்டு.

''காதலோ காதல்'' (Song of Love)

என்ற பாடலில் திரும்பக் கூறும் உத்தி தெற்றெனப் புலனாகிறது. சான்றாக,

''I am the poet's elation,
And the artists' revelation

And the musicians' **inspiration,"**
"yet I **revealed** myself to Solomon and
He drew **Wisdom** from my presence"

என்ற வரிகளில் உள்ள தடித்த எழுத்துச் சொற்கள் தமிழில் இரண்டு நிகரன்களைப் பெற்று வந்துள்ளன. அவை வருமாறு:

"நான் கவிஞர்களின் பெருமை! பெருமிதம் (elation)
ஓவியரின் விளம்பரம், வெளியீடு! களியாட்டம் (revelation)
பாடகரின் உணர்ச்சி வெள்ளம், ஆவேசம் (inspiration)

"சாலமனுக்கு என்னையே
உணர்த்தினேன், வெளிப்படுத்தினேன்! (revealed)
என் உருவத்தின் முன்னிலையிலே
அவன் அறிவை, ஞானத்தைப் பெற்றான்! (wisdom)

இவற்றில் முதல் நிகரன் இயல்பாகவும், ஏற்புடையதாகவும் இருந்தாலும் கூட மறுபடியும் மற்றொரு நிகரனை மொழிபெயர்ப்பு ஆசிரியர் அமைத்துள்ளார். திரும்ப வரும் இரண்டாம் நிகரனில் பொருள் வேறுபடு அதிகம் இல்லை. இவ் இரண்டாம் நிகரன் முதல் நிகரனில் நிழலாக (shades of meaning) அமைந்துள்ளது.

பிற உத்திகள்:

தத்துவம் பொதிந்த, இலக்கியச் செறிவுடைய கலீல் கிப்ரானின் படைப்புக்களை மொழிபெயர்த்த அ.மா. சகதீசன் மூலநூற் கருத்தை மாற்றாமலும், குறைக்காமலும், முரண்படுத்தாமலும் தம்முடைய கருத்தை ஏற்றி உரைக்காமலுமிருக்க மேற்கூறியவை தவிர வேறு சில உத்தி முறைகளையும் பயன்படுத்தியுள்ளார். அவையாவன:

1. எழுவாய் அல்லது பயனிலை சேர்த்தல்
2. தொடர்புடையவற்றைச் சேர்த்துக் கூறுதல்
   சான்று; 'மலையும் மடுவும் என்றாவது இணையுமா?
   (இது மூலத்தின் மொழிபெயர்ப்பு)
   இவ்வரியைத் தொடர்ந்து வரும் அடுத்த வரி
   'மலைச் சிகரமும் சமவெளியும் சமமாகுமா?
   என்பது; இவ்வரி தொடர்புடையனவற்றைச் சேர்த்துக் கூறுவதாகும்.

3. பேச்சுத் தமிழைப் புகுத்துதல்
சான்று : 'பலவானுக்கும் நோஞ்சானுக்கும் இடையே இப்போராட்டம் என்றுதான் முடியும்'

இத்தகைய பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்ட போதும் கூட பெருவாரியாக சாலப் பயனுடையனவாக விளங்கும் மூன்று உத்தி முறைகள் மட்டுமே இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

முடிவுரை : மொழிபெயர்ப்பு செம்மை பெறுவதற்கு உறுதுணையாய் அமையும் மேற்கூறிய உத்திகள், தமிழ் வாசகர் மூலநூலாசிரியரான கலீல் கிப்ரானை நன்கு புரிந்துகொள்ளப் பேருதவி புரிகின்றன. மொழிபெயர்ப்பில் கடுமையையும், அயன்மையையும் குறைத்து இயல்பாக அமைவதற்கு இவ் உத்திகள் உதவுகின்றன. மேலும் மூலநூலாசிரியரின் கருத்து, மொழிபெயர்ப்பைப் படிக்கும் வாசகர்களை முழுமையாக வந்து அடையவும் உதவுகின்றது. இதுவே மொழிபெயர்ப்பின் வெற்றியும் பயனுமாகும்.

தமிழின் சிறப்பியல்பு

திரு. நாராயணையங்கார்

தமிழ்மொழியில் பிறமொழிகளில் இல்லாத கல்விமுறை ஒன்று தொன்றுதொட்டுக் கற்பிக்கப்பட்டுவருகிறது. அது தமிழ் மொழிக்குச் சிறப்பான பொருளிலக்கணமேயாம்.

ஒவ்வொருபாஷையிலும் அவ்வப்பாஷையைப் பிழைபடாது வழங்கிவருதற்கும் எளிதில் உணர்தற்கும் உதவியாகப் பாஷா சாஸ்திரங்கள் (வழக்கு நூல்கள்) உண்டு.

அவை அவ்வப்பாஷைக்குரிய சொல்லிலக்கணங்களை மட்டும் சொல்லுமேயன்றி, செய்யுள்வழக்கிற்குரிய பொருளிலக் கணம் ஒன்றை வேறாகப் படைத்துக்கொண்டு சொல்லுவனவல்ல.

தமிழ்க்குரிய பாஷாசாஸ்திரம் வழக்குநூல் என்னும் பெய ருடையதாய், தமிழ்ப்பாஷையை உலகவழக்கு, செய்யுள் வழக்கு என இரண்டுவகையாகப் பகுத்துக்கொண்டு, உலகவழக்கிலக் கணங்களை எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் என இருவகைப் படுத்தி இரண்டு அதிகாரங்களால் அவற்றைச் சொல்லுகிறது; செய்யுள் வழக்கிலக்கணங்கள் பலவும் பொருளதிகாரத்தாற் சொல்லப்படுகின்றன.

செய்யுளுள் சுவைநயந்தோன்றச் சொல்லப்படும் பொருள் களுள் சிறந்த இன்பச்சுவைக்குரிய காமத்தைச் செய்யுளகத்து வெளிப்படக்கிளப்பது அசப்பியம் (இழிவழக்கு) ஆகும் என்பது பற்றி அதனை சப்பியம் (நன்மக்கள் வழக்கு) ஆகும்படி அந் தரங்கமாக மறைத்துக் கூறவேண்டும் என்னும் கருத்தால் அகப் பொருள் என்று பெயரிட்டு ஒருபகுதியாக்கியும், அக்காமத்தின் வேறாயுள்ள பிறபொருள்களையெல்லாம் பகிரங்கமாகக் கூறலாம் என்பது பற்றிப் புறப்பொருள் என்று பெயரிட்டு வேறொரு பகுதி யாக்கியும் இலக்கணங் கூறப்பட்டிருக்கிறது.

இக்கருத்துப் பற்றியே அகத்திணை ஒழுக்க (காமவொ ழுக்க)த்திற்குரிய காதலர்களாகிய தலைவன் தலைவிகளுடைய உண்மையான ஊர், பெயர் முதலிய ஒன்றும் கூறலாகாதென்றும்,

அவை திணைபற்றிய சங்கேதப் பெயர்களால் வழங்கவேண்டு மென்றும் விதிக்கப்பட்டுள்ளன.

இவ்விலக்கணங்கள் தமிழ்ப்புலவர்களுக்குக் காம ஒழுக் கத்தை வெளிப்படக் கூறாது மறைத்துப்பேசவேண்டும் என்னும் நாகரிக முதிர்ச்சியைக் கற்பிக்கின்றன.

அகத்திணையொழுக்கம் களவு கற்பு என இருவகையாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

களவொழுக்கமாவது: தமக்கு ஒப்பும் உயர்வு மில்லாத காதலனும் காதலியும் தெய்வாதீனமா யெதிர்ப்பட்டுத் தாமே கூடும் கூட்டம். இக்கூட்டம் சிலகாலம் நிகழாநிற்கச் சிறிது சிறிதாகப் புறத்தார்க்குப் புலனாகி அம்பலும் அலரும் உண்டா வதறிந்து காதலன் காதலியை உற்றாரும் பெற்றாரு முணர மணந்துகொண்டு கற்பிய லொழுக்கத்தவனாவான் எனக் காவிய மரியாதை என்னும் புலனெறி வழக்கம் கற்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறொழுகுங் களவொழுக்கத்திடையும் கற்பொழுக்கத் திடையும் காதலர் கூட்டத்துக் குரிய பலபல நிகழ்ச்சிகளையும் வரிசைப் படுத்தி, இன்பச்சுவை பெறப்பாடுதற்குரிய பலபகுதி களும் கிளவிகளுமாகப் பாகுபாடுசெய்து இலக்கணம் விதிக்கப் பட்டிருக்கிறது.

இவ்விருவகை யொழுக்கத்திற்கும் இலக்கியம் முறையே வள்ளியையும் தெய்வயானையையும் செவ்வேள் மணந்தது பொருந்துவதாகும். இக்கருத்து, பரிபாடல் 9-ஆம் பாட்டில் 12-ஆம் அடி தொடங்கி 26-ஆம் அடிமுடியவுள்ள அடிகளால் நான்மறைப்புல வரைநோக்கித் தமிழது சிறப்புக் கூறுமுகத்தால் கூறப்பட்டிருப்பதாலறியலாம். அவை வருமாறு:

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமங் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதான்
இரத்தலு மீதலு மிவையுள் ளீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற

நாள்ணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனும் ஊடலுள் ளதுவே, அதனால்,
அகற லறியா வணியிழை நல்லார்
இகறலைக் கொண்டு துணிக்குந் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்''

என்பது.

இவ்வடிகளால், கற்பினும் களவொழுக்கமே மிக்கதோரின்பம் பயப்பதென்று காட்டப்பட்டிருக்கிறது.

களவு கற்பு என்னும் இருவகைக்காம நுகர்ச்சிகளைக் கைக்கிளைமுதலாகப் பெருந்திணையிறுதியாக ஏழுதிணைகளாகப் பகுத்து, ஒவ்வொருதிணையிலும் அதததற்குரிய பகுதிகளும் கிளவிகளுமாக வகுத்து, இலக்கணங்கள் உரைக்கப்பட்டன. அவ்வத்திணையும் துறையும்பற்றி சங்ககாலப்புலவர்கள் பாடிய தனிப்பாக்களும் பல தொகுக்கப்பட்டன. அவை கலித்தொகைமுதலியன.

பிறகாலப்புலவர்கள் 'அகப்பொருட்கோவை' என்னும் பிரபந்தப்பாடல்களால் காமஇன்பத்தை அடிதொடங்கி முடியுமளவும் நிகழும் நிகழ்ச்சிகளெல்லாம் விளக்கச்செய்தனர். அவற்றால், ஒப்புயர்வற்ற காதலர், நுகரும் காம இன்பம் இத்தன்மைத்தெனக் காட்டப்பட்டதுபோல விளங்கும். அதாவது: முதலில் அவ்வின்பத்தில் அக்காதலர்க்குள்ள வேட்கைமிகுதியும், அதனை எய்துதற்கு அவர்கள் வருந்தும் வருத்தமிகுதியும் புலனாதலுடன், அவ்வொழுக்கம் வளரவளர அவ்வின்பம் தளரும் தளர்த்தியும், அவ்வின்பந்துய்த்தற்கு இடையே நிகழுந் துன்பங்களும் அனுபவித்துக்கொண்டுபோந்து, அதன் நிலையாமைகண்டு உவர்த்துத் துறவில் மனம் செல்லுமளவும் காணப்படும் என்பதாம். இக்கருத்துக் கொண்ட செய்யுளும் ஒன்றுண்டு; அது,

'முன்னா ளிருவரும் யாக்கையொன் றாக முயங்கினம்யாம்
பின்னாட் பிரியையென் றாயினம் பேணுகின்ற
இன்னாட் கணவன் மனைவியென் றாயினம் எண்ணில்இனிச்
சின்னாளி லெப்படி யோதெரியோம்விதி செய்வதுவே'

என்பது. இதனால், களவொழுக்கம் நிகழும் காலத்தில் காதலரிருவர்க்கும் உயிர் ஒன்றாயிருந்ததேயன்றி உடலும் ஒன்றாயிருந்தது

என்று சொல்லும்படி ஒருவாற்றானும் சிறிதும் வேறுபாடில்லாத முயக்க முற்றிருந்தார்களென்றும், பின்பு களவு சிறிதுசிறிதாக வெளிப்படத்தொடங்கி அம்பலும் அலரு முண்டாய்க் கூட்டம் இடையறவுபடுதலால், வரைந்துகொள்ளுமளவும், ஒருவர்க்கொருவர் மிக்க பிரியமுள்ளவர் என்னும்படி சிறிது வேறுபட்டவரா யொழுகிவந்தாரென்றும், பின்பு வரைந்துகொண்ட கற்பொழுக்கத்தில் புதல்வரைப் பெறுமளவும் அறத்தாறொழுகுதலால், விலக்கிய நாளொழிந்தும், குரவர்கட்டளைக் கிசைந்தும், மகப்பேறு என்னும் பிறிதொரு பயன்கருதியும் கூடுதலால், முன்னையநிலைகளின் வேறு பாடுதோன்றக் கணவன் மனைவி என்னும் முறையுடையராய் வாழ்ந்தனர் என்றும், இனி வருங்காலநிகழ்ச்சி தாபதநிலையோ? பிறிதோ? அறிதற்கியலாது வேறுபட்டு விலகுவது என்றும் நிரலே பொருள்கள் விளங்கநின்றமையால், காமபோகத்திலுள்ள உயர்ந்த இன்பமும் நாளடைவே உவர்ப்புடையதாகித் துறக்கத்தக்க துன்பமும் நிலையாமையும் உடையதென்பதைக் காட்டும்படியாய்த் தமிழில் அகப்பொருளிலக்கணம் செய்யப்பட்டிருக்கிறதென்பது விளங்குகிறது.

இவ்வாறே புறப்பொருளிலக்கணங்களும், அறத்தொடுபட்ட காமவின்ப நுகர்தற்கு இன்றியமையாத பொருளீட்டவேண்டியும் காக்கவேண்டியும் பகைவரிற் போர்புரிதலும் வெற்றி தோல்விகளிற்றுன்பமும் பொன்றலும் கையறுநிலைகளும் முதலிய பொருள் பற்றிக் கூறப்பட்ட பலவகையான திணை துறைவகைவரிசையால் ஒருவர் உயிர்வாழ்க்கையில் அவரவர்நிலைமைக்கேற்றவாறு நிகழும் நிகழ்ச்சிகளின் இன்பதுன்பக் கூறுபாடுகளையும், உலகவாழ்க்கையின் நிலையாமையையும் காட்டித் துறக்குமியல்பைத் தோற்றுவித்தலால், தமிழ்ப்பாஷையின் இலக்கணமாகிய வழக்குநூல், அதனைக் கற்கும் போதே, அறம் பொருள் இன்பம் என்னுமிவற்றின் கூறுபாடுகளும், அவை இன்பதுன்பங்களிரண்டும் விரவியனவென்பதும், நிலையாமை யுடையனவென்பதும் பிறிதொருநூல்வேண்டாம லறிந்துகொள்ளும்படி அமைக்கப் பெற்றிருப்பது தமிழ்மொழிக்கொரு சிறப்பாயிற்று.

குறிப்பு: இது 1913 நவம்பர்–திசம்பர் இதழில் வெளிவந்தது. (தொகுதி 12, பகுதி 1)

பிரபாகரமாலை

இஃது இராமநாதபுரம் சமஸ்தானம் மஹாராஜராஜஸ்ரீ
முத்துவிஜயாகுநாத முத்துராமலிங்க சேதுபதியவர்கள்
இயற்றியது

ஷை மஹாராஜா அவர்களது பரப்பிரம்ம முத்திராக்ஷர
சாலையில் இரண்டாவது பதிப்பிக்கப்பட்டது சர்வதாரி ஸூ

என்னை யுணரேனே யெங்கள்குல தெய்வமெனும்
உன்னை யுணரும்வகை யோதாய் ப்ரபாகரமே

வீணி லதிகாலம் வேண்டா துனைமறந்தேன்
காணிலினி நீயே கதியாம் ப்ரபாகரமே

நொந்தா வுனையா னுவல்வேன் குலம்தவிர
வந்தா தரித்து வரந்தா ப்ரபாகரமே

பாபசம மாம்வினையாற் பாதையுற்ற நெஞ்சிடையே
தாப சமநந் தருவாய் ப்ரபாகரமே

தெள்ளமுதே தேனே செழுங்கனியே யெற்புரக்கும்
உள்ளமே துன்ப மொழித்தாள் ப்ரபாகரமே

பொன்னாசை யாலடியேன் பொய்யனென்பே ராவதில்லை
யுன்னாசை யொன்றென் னுளத்திற் ப்ரபாகரமே

சண்டாளர் கும்பிற் றலைவிரித்தா டாதுனது
தண்டா மரைப்பதங்கள் தந்தாள் ப்ரபாகரமே

காக்ஷிக் கெளிதே கருணைக் கிருப்பிடமே
மோக்ஷ ப்ரதாயகமே முதலே ப்ரபாகரமே

வா துரைத்து வம்பிழுத்து மல்லாடல் விட்டுமனப்
போதெடுத் தர்ச்சித்தேன் புரந்தாள் ப்ரபாகரமே

உற்றா ருறவினரு ணர்த்துனர்நன் கோதுனரெற்
பெற்றார் துணைவருநீ பேணாய் ப்ரபாகரமே

சாத்திரங்க ளோதுஞ் சடங்கறியே னென்னுளத்தி
னேத்திரமே யெங்கு நிறைந்தாய் ப்ரபாகரமே

வநக்குரங்கென் றாலோர் வழியுளா மென்புன்
மநக்குரங்கை நீதிருத்த வல்லாய் ப்ரபாகரமே

உன்னை மறந்தடியே னுய்வனோ தெய்வமே
என்னைமறந் தாற்கதிவே றில்லை ப்ரபாகரமே

மண்ணாசை யாலென் மதிமயங்கே னிற்றுதிக்கும்
பண்ணாசையுள்ளம் படரும் ப்ரபாகரமே

ஆவிக்கு ளாவியா வண்டமெலாந் தானாக
மேவிச் சுகமளிக்கு மெய்யே ப்ரபாகரமே

கல்விரும்பு செம்பிலுனைக் காண்பார் சிலர்சிலரோ
சொல்வெளியுள் ளங்காணத் தோற்றும் ப்ரபாகரமே

முந்துவினை சீறியெனை முளாதென் னெஞ்சில்விளை
வெந்துயரை நீக்கியருள் விள்ளாய் ப்ரபாகரமே

மூன்னினைந்தேன் பின்மறந்தேன் மோசமித னைத்திருத்தி
யுன்னைமற வாவறிவெற் கூட்டாய் ப்ரபாகரமே

பெண்ணாசை யாற்றமியேன் பித்தேறி நில்லேனின்
கண்ணாசை யுண்டு கதியே ப்ரபாகரமே

காயுமா யைக்கொழுமுட் கான்கடந்தோர் நல்வழிதேர்
தாயுமா னாரறிவு தாராய் ப்ரபாகரமே

எக்குணத்தி லெத்தொழிலி லெவ்விடத்தியா னுற்றிடினு
மக்கணங்க டோறுமுன்றாட் கன்பன் ப்ரபாகரமே

தாமதமே விட்டுன் றனைமறந்தே னானாலுங்
காமிதங்கள் தந்தடியேற் காப்பாய் ப்ரபாகரமே

மாயைவச மாமயங்கு மைந்தர்பசி யாற்றுநல்ல
தாயைப்போல் வந்தா தரித்தாள் ப்ரபாகரமே

கண்டு மறிந்துகொளக் கைப்பற்ற வுள்ளிருத்த
விண்டுசொலக் கூடா விதமென் ப்ரபாகரமே

காணுங் கனவுளதோ காணுமற்றொன் றேயுளதோ
வீணின்மயங் காதுபயன் விண்டாள் ப்ரபாகரமே

உன்னையன்றித் தெய்வமென்ற துண்டோ குழவிகளை
யன்னையன்றிக் காப்பாவர்மற் றாரோ ப்ரபாகரமே

மாற்றார் நிதிக்காசை வைத்துமுன்றே னல்லனெனை
யேற்றா ளடிமைகொளா தென்னாம் ப்ரபாகரமே

வாதமுறை கற்றார் மதிகேட் டுழலாதியா
னோதுமுறை யுன்பெயரென் றேர்ந்தேன் ப்ரபாகரமே

தாயாநின் றாளிற் றமிழ்மா லிகைபுனைந்து
நோயான தைத்துரத்த நோற்றேன் ப்ரபாகரமே

எல்லா விடத்துமுன்பே ரேற்றிப் பணியுமென்மேற்
பொல்லாப் பகற்றியருள் போர்த்தாள் ப்ரபாகரமே

சிந்தனைக்கா ளாகித் தியங்காதெந் நாளுமுன்றாள்
வந்தனைக்கா ளாகும் வரந்தா ப்ரபாகரமே

ஆசை யுலகிலள வற்றதென்றா லுந்நினது
பூசையினண் புற்றேன்சொல் பூண்டாள் ப்ரபாகரமே

தொண்டாசை கண்டார்தஞ் சொல்லுதமிழ் புல்லெனினுங்
கொண்டாவல் தந்தாள் குருவே ப்ரபாகரமே

வாக்கிலொன்று நெஞ்சிலொன்று வைக்கும்வஞ்சர் சொற்குருகிக்
காக்குமறி வென்னுளம்வைக் காதே ப்ரபாகரமே

பேராசை யாங்கொடும்பேர் பேரநினை யல்லான்மற்
றோராசை மாற்றிவிட்ட வொன்றே ப்ரபாகரமே

பெற்றாள் வயிறும் பிறந்தா ருடலுமுனைச்
சொற்றாலல் லோசுகத்தைத் தோயும் ப்ரபாகரமே

நாவிற்சீர் பெற்றாரோர் நாளோனும் பண்ணிறைந்த
பாவிற்சீர்ப் பித்தாற்ப தந்தரும் ப்ரபாகரமே

தேனிரச மின்றுன் றிருவடிநா மம்போலுங்
கானரசோல் லாச கருணா ப்ரபாகரமே

எல்லாச் சுகமு மினிதருளி யெற்குபுரம்
வல்லானீ யென்று மதித்தேன் ப்ரபாகரமே

நெஞ்சினண்ணு துன்பைநின்கை நீட்டியெடுத் துக்கனல்சேர்
பஞ்சினிலை செய்தருட்கண் பாராய் ப்ரபாகரமே

உள்ளொன்று வாயொன் றுரைப்பா ருறவழித்தே
யெள்ளொன்று நெய்போ லிணைந்தாய் ப்ரபாகரமே

அஞ்ஞானத் தாலே யாற்றியுழ லாதுய்வான்
மெய்ஞ்ஞாந நிட்டைதர வேண்டும் ப்ரபாகரமே

காண்பதொன்று தோற்றுங் கருத்தொன்று வாய்ப்பதொன்றிவ்
வீண்பகைமா யந்தெளிய வேண்டும் ப்ரபாகரமே

பொய்யான மெய்யைப் பொருளென்று நம்புவனோ
மெய்யான வுன்னருளே வேண்டும் ப்ரபாகரமே

கள்ளுண்டு காமக் கடலழுந்தி நெஞ்சயர்ந்து
தள்ளுண்டு நிற்குமெனைத் தாங்காய் ப்ரபாகரமே

சண்டையிடு வார்கோடி தானைவரி லஞ்சுவனோ
தண்டையிட்ட நின்பதங்கள் தஞ்சம் ப்ரபாகரமே

உன்னாவி யுன்னுடலென் றொப்புவித்தே னேயருளாய்
என்னாசை குள்ளே யிருக்கும் ப்ரபாகரமே

அலைவாய்ப் படுதுரும்பொப் பாயுழலென் னெஞ்சம்
நிலையா யுணர்போதம் நிதா ப்ரபாகரமே

தோற்றம் - 1901 தொலைபேசி : 37097

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

(நிறுவனர் - கொடை வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்)

தமிழ்த் தேர்வு பற்றிய அறிக்கை

பேரன்புடையீர்,

வணக்கம். பெரும் கொடைவள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களால் 1901-ல் மதுரையில் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கம், அவர்களின் நெறிமுறையில் வழுவாது தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பணிபுரிந்து வருகின்றதென்பதை தமிழ் நெஞ்சங்கள் நன்கறியும். இச்சங்கத்தின் மூலம் பண்டித பட்டம் பெற்றோர் பலர். அவர்களில் பலர் வானுயர் புகழுடன் வாழ்ந்து வந்தனர். வாழ்ந்தும் வருகின்றனர். இப்போது இத்தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்படும் செந்தமிழ்க் கல்லூரி, பல்கலைக் கழக இணைப்பினைப் பெற்று இளம் இலக்கியம், இளங்கலை, முதுகலை, எம்ஃபில், ஆய்வு வகுப்பு ஆகியவற்றினை நடத்தி வருகின்றது. பாண்டித்துரைத் தேவரவர்கட்கு மதுரையின் மையப் பகுதியில் திருவுருவச் சிலையை தமிழக அரசு நிறுவி சிறப்புச் செய்துள்ளது.

கடந்த 9 ஆண்டுகளாக பள்ளி மாணவர்கள் தமிழ்த் தேர்வில் உயர்மதிப்பெண் பெற தமிழ்த் தேர்வினை எழுதி வருகின்றனர். அரசினரின் பாடத்திட்டத்தின்படியே வினாக்கள் கொடுக்கப்பட்டு விடை காணச் செய்து பரிசும் தகுதிச்சான்றும் வழங்கி வருகின்றோம்.

இவ்வாண்டு முதல் +2 முதலாண்டு மாணவர்களுக்கு மாவட்ட அளவில் அரசு தேர்வு நடத்த இருப்பதால் மதுரைத் தமிழ்ச் சங்கமும் +2 முதலாண்டு மாணவர்களுக்கு தமிழ்த் தேர்வு நடத்த இருப்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

தேர்வுக் கட்டணமும் தேர்வு நடைபெறும் தேதியும் நேரமும்

	கட்டணம்	நாள்		நேரம்
+2 இரண்டாமாண்டு	5.25	23-1-93	முதல்தாள்	10—1
			இரண்டாம் தாள்	2—5

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

1. மதுரைத் தமிழ்ச்சங்க வரலாறு 12-00
2. பன்னூற்றிரட்டு 5-00
3. தமிழ்ச் சொல்லகராதி 25-00
4. மாறனலங்காரம் (பொருளணியியலுரை) 25-00
5. பெருந்தொகை (முதல் 50 பாடல்கள் மூலமும் உரையும்) 2-00
6. குருகைமான்மியம் 10-00
7. டி. சி. ஸ்ரீநிவாசய்யங்கார் நினைவு மலர் 1-00
8. பெருந்தொகை 15-00
9. செந்தமிழ்த் தொகுதி அட்டவணைக் குறிப்பு
10. செந்தமிழ்த் தொகுப்பு (ஓர் ஆண்டு) 10-00
11. கோவை, கலம்பக நூல்கள் 12-00
    1. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்
    2. மதுரை மும்மணிக் கோவை
    3. சிராமலைக்கோவை
    4. கலசைக்கோவை
    5. திருக்கலம்பகம் (மூலமும் உரையும்)
    6. திருவருணைக் கலம்பகம்
    7. குருமொழி வினாவிடை
12. உலா நூல்கள்
    1. திருவாரூருலா
    2. திருச்சிறு புலியூர் உலா
    3. விக்கிரம சோழனுலா
    4. கடம்பர் கோவில் உலா
    5. தேவையுலா
    6. புலவராற்றுப்படை
13. பாமாலை நூல்கள் 12.00
    1. திருப்பணிமாலை
    2. சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை (மூலமும் உரையும்)
    3. திருக்குற்றாலமாலை
    4. திருப்புல்லாணிமாலை
    5. திணைமாலை நூற்றைம்பது (மூலமும் உரையும்)
    6. கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை
    7. கலைசைச் சிலேடை வெண்பா
    8. திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் உரையும்)

14. இலக்கிய நூல்கள் 12-00

1. முத்தொள்ளாயிரச் செய்யுள்
2. ஐந்திணையைம்பது
3. திருநூற்றந்தாதி (மூலமும் உரையும்)
4. பழமொழி (,, ,,)
5. சங்கர நயினார் கோவில் அந்தாதி
6. திருத்தணிக்கைத் திருவிருத்தம்
7. நான்மணிக்கடிகை (மூலமும் உரையும்)

15. இலக்கண நூல்கள் 5-00

1. அரும்பொருள் விளக்க நிகண்டு
2. பன்னிரு பாட்டியல்
3. அநுமான விளக்கம்

16. மநிஷா பஞ்சகம்

1. மநிஷா பஞ்சகம்
2. ஞானாமிர்தக் கட்டளை
3. அட்டாங்க யோகக் குறள்
4. இராமோதந்தம்

செந்தமிழ்

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய இவ்விதழ் ஆண்டுக்கு நான்குமுறை வெளியிடப்பெறுவது. ஆண்டுச் சந்தா ரூ. 20-00. செந்தமிழைக் கண்ணுறும் தமிழன்பர்கள் சந்தாதாரராகச் சேர்ந்து பிறரையும் சந்தாதாரராகச் சேரத்தூண்டி இதழின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குறிப்பு :

1. புத்தகங்கள் வேண்டுவோர் தேவைக்கு எழுதும்பொழுது 25 விழுக்காடு முன் பணம் அனுப்ப வேண்டும். பாக்கித் தொகைக்கு நூல்கள் வி.பி.பி. மூலம் அனுப்பப்படும்.
2. விற்பனையாளர்களுக்கும் நூலகத்திற்கும் 15 விழுக்காடு கழிவு கொடுக்கப்படும்.
3. நூல்கள் அனுப்புவதற்கான செலவுகளை வாங்குபவரே ஏற்க வேண்டும்.

செயலாளர்
மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை - 1

திருப்பதி பிரிண்டர்ஸ், ★ மதுரை-1.